செந்தமிழ்

தொகுதி 84 திசம்பர் 90 பகுதி 4

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ . பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேர்ராசிரியர் டாக்டர்
நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம். லிட்., பி.எச்.டி.,

செந்தமிழ்

தொகுதி 84 திசம்பர் 90 பகுதி 4

ஆசிரியர். மா. தனுக்கோடிபாண்டியன். பி.ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்
நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்.டி.,

பொருளடக்கம்

1. ஒப்பிலக்கியமும் பண்பாடும் 3
   – டாக்டர் கதிர். மகாதேவன்

2. நாடி மருத்துவம் 13
   மோ.கோ. கோவைமணி

3. சிவஞான முனிவர் உரையில் இலக்கணக் கூறுகள் 21
   – டாக்டர் ஆ. ஆனந்தராசன்

4. புதுக்கவிதையில் வாழ்க்கைச் சிந்தனைகள் 26
   – டாக்டர் இரா. மோகன்

5. துன்னம்பெய் கோவணம் 32
   – பேரா. டாக்டர் ந. மாணிக்கம்

6. மூலத் திராவிடமொழி வினையமைப்பில் எதிர்மறை 37
   – டாக்டர் ஏ. ஆதித்தன்

7. வருக்கப் போராட்ட நாவல்களில் சாதியும் கடவுளும்
   – தெ. திருஞானமூர்த்தி

8. வாழ்த்துப் பாடல்கள்
   – தெ. முருகசாமி

9. 1990–91 ஆம் ஆண்டு தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு 53

10. 1989–90 ஆம் ஆண்டு ரொக்கப்பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரம் 57

ஒப்பிலக்கியமும் பண்பாடும்

டாக்டர் கதிர். மகாதேவன்
(பேராசிரியர், மதுரை
காமராசர் பல்கலைக் கழகம்)

இலக்கியம் மனித குலத்தின் கருவூலமாகும். மழை, காற்று என்பன போல இலக்கியம் பொதுவானது. பல்வேறு மொழிகளில் பல வடிவங்களில் காணப்படும் இலக்கியங்கள் மனிதத்தை மேம்படுத்தும் பெற்றி வாய்ந்தவை.

ஒப்புநோக்குதல் மனிதனுக்கு இயல்பானது – இதனை இயற்கை அவனுக்கு அளித்த பரிசு எனலாம். மனிதனின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஒப்புநோக்கும் தன்மை வேண்டற்பாலது. ஒப்புநோக்கும் இயல்பை எந்த இனம் மறுக்கிறதோ – புறக்கணிக்கிறதோ–அந்த இனம் அழியும் என்று கூறலாம். கிரேக்க இனம் இதற்குச் சான்றாகும். இந்நிலை இலக்கியத்திற்கும் பொருந்தும்.

ஒரு நாட்டு இலக்கியத்தை அந்த நாட்டின் எல்லை கடந்த பிற நாட்டு இலக்கியத்தோடு ஒப்பிட்டு நோக்குதல் என்பது ஒப்பிலக்கியத்தின் பொதுவிதி. அண்மைப் பார்வையும், சேய்மைப் பார்வையும் இணைந்த மூக்குக் கண்ணாடி போல ஒரு நாட்டு இலக்கியத்தை அந்நாட்டின் எல்லை கடந்த பிற நாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்குதலும் பொருந்தும். ஒப்பிலக்கியத்திற்கு விரிந்த எல்லை உலகம்.

ஒரு மொழி இலக்கியம்/ஓரிலக்கியப் பாடம் (monographic course) போதும் எனக் கருதுவோர் உளர். தமிழ் நாட்டில் ஓரிலக்கியப் பாடத்தைப் பெரிதும் பின்பற்றுகின்றனர்.

ஓரிலக்கியப் புலமை தேவையற்றது என்றோ, பயனற்றது என்றோ வலியுறுத்தவில்லை. அது கொள்ளத்தக்கதே. ஆயின்,

ஒப்பிலக்கியப் புலமை தள்ளத் தக்கதா என்பதே வினாவாகும்.

ஒப்பிலக்கியத்தினால் இன்னின்ன நன்மைகள் உண்டு என்று உடன்பாட்டில் காண்பதை விட, ஒப்பிலக்கியத்தைப் புறக்கணிப்பதால் ஏற்படும் தீமைகளை எதிர்மறையில் நோக்குவது நன்று. ஏனெனில், பயன்களைப் பற்றிக் கவலைப் படாதவர் இருக்கலாம்; பயங்கர விளைவுகளை எண்ணாதவர் உளரோ?

சிலர் ஒப்பிலக்கியம் படிப்பது ஒப்புக்குப் படிப்பது என்று நினைக்கின்றனர். வேறு சிலர் பலமொழி அறிவு பெற்றோரே ஒப்பிலக்கியத்திற்கு உரியர் என்று தப்புக் கணக்குப் போடுகின்றனர். எனவே, முதலில் ஒப்பிலக்கியம் என்பது யாது என்பதை இங்கு விளக்கவேண்டும்

பன்மொழி அறிவு ஒப்பிலக்கியம் பயில்வோர்க்குத் தேவை என்பதில் ஐயமில்லை. மொழிபெயர்ப்புக்கள் ஒப்பிலக்கிய அறிவிற்குத் துணைபுரிகின்றன. ''இலக்கிய வளர்ச்சியினைக் கணித்த சாடுவிக்குகளுக்கு (Chadwicks) மூலமொழியிலிருந்து மூன்றாவது-நான்காவது மொழிபெயர்ப்புக்கள் பயன்பட்டன என்பதை அறிதல் வேண்டும்.

ஒப்பியம் (ஒப்பிலக்கியம்) அறிந்த மேலைத் திறனாளிகள் மூவர் தரும் விளக்கங்களைத் தேர்ந்து தெளிதல் நன்று.

பேராசிரியர் பொசுனெட்டு (Posnett) ஆங்கிலப் பேராசிரியர் ஆவார். அவர் எழுதிய ''ஒப்பிலக்கியம்'' எனும் நூல் (1854) ஒப்பிலக்கியத் துறையில் முழுமையான முதல் நூலாகும். 'உல்ரிக்கு வெய்சுதீன்' (Ulrich Weisstein) என்பவர் 'இந்நூல் வரலாற்று அறிவியல் நோக்கும் சமூகவியல் போக்கும் கொண்டதாகும் என்றும், பேராசிரியர் 'பொசுனெட்டு' ஒப்பியம் பற்றிக் கொண்ட கருத்தைப் பின்வரும் சிறிய மாறுதலுடன் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் கூறுவர்.

> '' ஒப்பிலக்கியம் சமுதாய இயல் உருவாக்கத்தைக்
> காட்டும் ; இனத்திலிருந்து நகரத்திற்கும்
> நகரிலிருந்து நாட்டிற்கும் மனித

எண்ணங்கள் வளர்நிலை பெறுவதை
ஒப்பிலக்கியத்தின் வழி கணிக்க இயலும்''

என்பது பேராசிரியர் பொசுனெட்டு ஒப்பியம் பற்றித் தொடக்க நிலையில் கொண்ட கருத்து.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஒப்பியல் ஆய்வு தளர் நடை போடத் தொடங்கியது. கயார்டு (GUYARD) என்பவர் ஒப்பிலக்கியத்தை விளக்குகையில் பின் வருமாறு கூறுகிறார் :

'' ஒப்பிலக்கியம் என்பது அகில உலக இலக்கிய உறவுகளைப் புலப்படுத்தும்; இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இலக்கியங்களில் காணப்படும் அடிக்கருத்துக்கள் (themes), எண்ணங்கள் (ideas), நூல்கள் (Books), உணர்ச்சிகள் (Feelings) என்பனவற்றின் தொடர்பினை ஒப்புநோக்கிக் காணவிழையும் ஒப்பாயுநர்க்கு நாட்டெல்லை கடந்து நோக்கும் பெற்றிக்கு வழிவகுக்கும். பன்னாட்டு இலக்கியங்களின் அறிவைப் பெறுதலும் நுவல்பொருள் தேரும் நூலறிவினை அடைதலும் ஒப்பாளிக்குச் சில இன்றியமையாத் தகுதிகளாகும்.''

எ. ஓவென் ஆல்ரிட்சு (A. Owen Olridge) என்பவர் ''ஒப்பியம் என்பது தேசிய இலக்கியங்கள் ஒன்றோடு ஒன்றை உறழ்ந்து காட்டி வேற்றுமையுணர்வைத் தோற்றுவிப்பது அன்று; மாறாக ஒரு மொழி இலக்கிய அறிவையும் நோக்கையும் விரிவுபடுத்தவும், நாட்டெல்லை என்ற குறுகிய பார்வையை அகற்றவும், பண்பாட்டு விளக்கப் பனுவல்களையும் மனிதம் உணர்த்தும் வினைகளையும் தொடர்பு காட்டி உறவுகளை உணர்ந்து கொள்ளவும் உதவும்'' என்பர். சுருங்கக் கூறின், ஒன்றிற்கு மேற்பட்ட தேசிய ஒப்பியக் கண்ணோட்டத்தில் உற்று நோக்குதலும், அறிவியல் சார்ந்த பிற துறைகளுடன் கூர்ந்து நோக்குதலும் ஒப்பியத்தின் பொருளாகும்.

பரந்த நிலையில் மனிதரிடையே பண்பாடுகள் தரும் வேறுபாடுகள், நாகரிகம் காட்டும் மாறுபாடுகள், பிற துறைகள் இலக்கியத்தில் கொள்ளும் ஈடுபாடுகள் ஒப்பிலக்கிய நோக்கால் தெளிவு பெறும். இலக்கியச் சிக்கல்களை—முடிச்சுகளைத் தீர்க்க

ஒப்பியம் உதவும். இலக்கியம் இனவாழ்வின் தனிப்பண்பாகும் என்பர் அறிஞர் பொசுனெட்டு. இலக்கியப் பாடுபொருளில் பண் பாடென்பது ஊடு பொருளாய்த் தென்படும். இலக்கியத்தை ஆழ்ந்து கற்போர்க்கன்றிப் பிறர்க்குப் பண்பாடு தேடுபொருளா யுள்ளது.

சங்க இலக்கியத்தின் தனித்தன்மை அறியாது, அக இலக்கியத்தின் செவ்வி புரியாது, 'சமசுகிருதத்திலும் காதல் பாடல் உண்டு; உங்கள் அகப்பாடலுக்கும் வடமொழிக் காதற் பாடல்களுக்கும் பெரிதும் வேறுபாடில்லை என்று கூறுவோரும் உளர்.

காதற் பாடல்கள் மூலம் குறிப்பிட்ட சமுதாயத்தின் பண் பாட்டைச் செவ்விதின் உணரலாம். அதனாலன்றோ ''ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ப் பண்பாட்டினை அறிவித்தற்குக் கபிலர் குறிஞ்சிப் பாட்டைப்'' பாடினார்! கபிலர் ஒப்பு நோக்கும் உத்தி அறிந்தவர் என்பது மட்டுமன்று: ஒப்புநோக்கிச் செப்பம் பொலியச் சித்திரிக்கும் வித்தகமும் வாய்ந்தவர். அவர் தம் குறிஞ்சிப்பாட்டு 'அறத்தோடு நிற்றல்' என்ற துறையை யாழோர் கூட்டத்து மணஇயல்பாகிய காந்தருவத்தோடு ஒப்பு நோக்கிப் பாடிய பாடலே ஆகும் என்பதை நுண்ணிதின் நோக்கு வோர் தெள்ளத்தெளிவாக உணர்வர்.

புலனின்பம் இலக்கியத்தில் எதிரொளிப்பதின் மூலம், ஒரு சமுதாயத்தின் உண்மைப்பண்பாட்டினை உணரலாம்.

பண்பிற்கு நிலைக்களனான காதற் பாடல்களின் குறிக் கோள் ஒரே மாதிரியான சூழலில் ஒன்றுபோல் அமைவதைக் காணலாம்.

காதலுக்கு இன்பமும் இன்பத்திற்குக் காதலும் என்பது மனிதகுலத்திற்கு உரியதாக உளது. ஆயின், இன்பம் ஒன்றே காதலின் குறிக்கோள் என்று கூறமுடியாது. புலனின்பத்தில் எளியரானோர் பண்பாட்டினை இழப்பர் ; பண்பாட்டினை இழப்போர் இனத்தோடு அழிவர்.

பொதுவாக இன்பம் எல்லா உயிர்க்கும் உடலில் ஒன்றி யிருக்கும் ; இது பிராய்டின் (Freud) தத்துவம். இக்கருத்தினைத் தொல்காப்பியர் அன்றே அறிவர். இவ்வறிவியல் கருத்தை,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற்றாகும்''

என்று அவர் கூறுவர்.

இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்ட கிரேக்கர்கள் காதலித்ததை அடைவதே வாழ்க்கை என்ற முன்வரிச் சட்டத்தைக் கொண்டனர். ''இன்பமும் பொருளும் அறனும்'' என்ற முக்கூட்டுக் கொள்கையைக் கிரேக்கர்கள் ஏற்றிப் போற்றினர்.

''நிலையிலா மக்கட்கு உலைவிலா முதல்நலம்
உடல் நலமாகும்; உடனடுத்திடுவது
மேனியழகாம்; மேன்மையி லடுத்தது
வஞ்சனை யில்லா வளமைச் செல்வமாம்;
நாலாம்பேறு நலஞ்சேர் இளமையோ
டிணங்கிடு நண்பரோ டிணைந்திட லாகும்''

என்று இதனைக் கவிதை நலம்படக் கூறலாம்.

''உலைவிலா முதல் நலம் உடல் நலமாகும்'' என்றும் ''இளமையோ டிணங்கிடு நண்பரோ டிணைந்திடலாகும்'' என்றும் கூறுவதனால் இன்பத்தையும், ''வளமைச் செல்வம்'' என்று சுட்டுவதனால் பொருளையும், ''வஞ்சனை இல்லா'' என்று அடைமொழி பொருளுக்கு இடுவதனால் அறத்தையும் ... ... கிரேக்கர் தம் பண்பட்ட வாழ்க்கையின் குறிக்கோளாகவும், இலக்கியங்களின் பண்பாட்டு ஊடுபொருளாகவும் கொண்டனர். எனவே, பழந்தமிழரின் அகப்பொருள் குறிக்கோளாகிய ''இன்பமும் பொருளும் அறனும்'' எனும் தொல்காப்பிய நூற்பாவின் பொருள் இதில் தொனிப்பத்தைக் காணலாம். 'வீடு' (துறக்கம்) இங்குச் சுட்டப்பட்வில்லை! வீரநிலைக் காலத் (வீடு) துறக்கும் இவ்வினங்களில் உண்டு.

கிரேக்கர்களின் புலனுகர்வு வேட்கையை ஓரளவு பழந்தமிழர் மருத நில வாழ்க்கையில் காண்கின்றோம். கிரேக்க உரோமானிய, மொசபடோமிய நாகரிகங்கள் உலக வரலாற்றில் பெரிதும் மதிக்கப்பட்டன. கிரேக்க நாட்டு அறிஞர்கள் முதிர்ந்த அறிவுத்திறம் உடையவர்கள், அவர்கள் உலக மக்களுக்கு வழி காட்டாத துறைகளே இல்லை எனலாம். அத்தகைய அரிய

பெரிய நாகரிகம் படைத்த கிரேக்க நாடும் மொழியும் வீழ்ந்து பட்டன. அதற்குரிய காரணங்களைக் காணுங்கால், நாம் வியப் படைகின்றோம். அங்கு அவர்கள் மனம் வீழ்ச்சி அடைந்த காலத்து இனவாழ்வின் குணநலன்கள் துறக்கப்பட்டன. எதிலும் எங்கும் புலனுர்வு வேட்டையில் அவர்கள் ஈடுபட்டனர்.

விளைநிலத்திலும் அமர்க்களத்திலும் மள்ளர்களாய்க் காட்சி அளித்த கிரேக்கர்கள், தம் வாழ்வின் போக்கை மாற்றிப் பரத்தையருடன் கூடி மகிழ்வதையே வாழ்வின் பயனாகக் கருதினர் போலும்! கிரேக்க இலக்கியம் அக்காலத்து இழிந்த உணர்ச்சிக்கும் இழுக்கத்திற்கும் இடந்தந்தது மது, மங்கை, புலால் என்பவையே வாழ்வு எனக் கருதப்பட்ட காரணத்தால் அவ்வினம் பண்பாட்டை மறந்தது; மண்புக்கு மாய்ந்தது ஒப்பிலக்கிய அறிவு இதுபோன்ற பல பண்பாட்டு உண்மைகளை உரைப்பதைக் காணலாம்.

தமிழிலக்கியங்களின் சிறப்புக்களை உணர வேண்டுமானாலும், உலகறியச் செய்ய வேண்டும் என்றாலும் ஒப்பிலக்கிய நோக்கே உதவுகிறது. இதற்குச் சில டண்பாட்டுத் தொடர்பான உண்மைகளைக் காண்போம்.

பண்பாட்டில் மாறுதல் ஏற்பட்ட காலக் கட்டத்தையும் காண்போம். தமிழ்நாட்டில் திடீரென்று ஒரு காலக் கட்டத்தில் அறநூல்கள் தோன்றுகின்றன. கடைச் சங்க காலத்தின் இறுதியில் தமிழ்நாடு மாறுதலை நோக்கி விரைந்த காலத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. அப்பதினெட்டு நூல்களிலும் பதினொரு நூல்கள் அற நூல்கள்; அப்பதினெட்டு நூல்களிலும் காலத்தால் முந்தியது முப்பால் எனப்படும் திருக்குறள். அதுவும் அறவிலக்கிய நூலேயாம்.

ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அறநூல்கள் மட்டும் தோன்றுகின்றன என்றால், அக்காலச் சூழலில் என்ன கேடு வந்தது? ஒருகால், அந்தச் சமுதாயத்தில் ஒழுக்கம் சீர் கெட்டுச் சிதைந்து போகும் நிலையில் இருக்க, அந்நிலையைச் செப்பஞ் செய்ய, நல்லொழுக்க நெறியினை உருவாக்க அறநூல்கள் தோன்றின எனக் கூறலாமா?

அற இலக்கிய நூல்கள் சட்டங்கள் அல்ல! குற்றங்கள் மலிந்தபோது, புதுப்புதுச் சட்டங்கள் இயற்றுவது உண்டு. ஆனால், இலக்கியங்களும் நீதிநூல்களும் அவை தோன்றிய சூழலில் வரவேற்கப்பட்டிருக்க வேண்டும். பண்டிதர்கள் மட்டும் படித்துக் கொள்ள நூல்கள் என்ற நிலை அன்று இல்லை! பணம் இருந்தால் எந்த இலட்சியமுமின்றிச் சில இலட்சம் படிகள் அச்சடிக்கலாம் என்ற நிலை அன்று இல்லை!

கிரேக்கர்கள் எதிலும் எங்கும் இன்பத்தை விழைந்தது போலத் தமிழர்களும் சங்க காலத்தில் இன்பத்தில் எளியராய் வாழ்ந்தனர் போலும்! ஒப்பீட்டு நோக்கில் இவ்விரு இனமக்கட் பண்பாட்டையும் இலக்கியத்தையும் காணுங்கால், சங்கம் மருவிய காலத்தில் நீதி நூல்கள் ஏன் தோன்றின என்பதைக் கணிக்க இயலும். கிரேக்க நாட்டிலும் வீரத்தைப் பெரிதாகவும் இன்பத்தை அதனினும் வேண்டற்பாலதாகவும் மதித்த காலத்திற்குப் பின்னர் பிளேட்டோ முதலியோர் எழுதிய நீதி நூல்கள் தோன்றக் காண்கிறோம்.

முப்பால் (திருக்குறள்) தோன்றுவதற்கு முன்னால் இருந்த கவிஞர்கள் உள்ளதை உணர்ந்தவாறு கவிதை புனைந்த வித்தகர்கள்! ஆனால், இன்பத்தில் எளியரான (பேகன் - கண்ணகி - நல்லூர்பரத்தை) சிலர் மருதத் திணையைப் பாடினர். சிலர் அதனை இழிவெனக் கூறி மன்னனைக் கடிந்தாரலர்கள் உண்டனர்; அதனைப் பாடவும் செய்தனர். அது தவறு என்று எண்ணினாரலர்! புலால் உண்டனர்; அது இயல்பெனப் பாடுபொருளாயிற்று. இந்தச் சூழலில் தமிழர் சிக்கிச் சீரழிந்த நிலையில் தோன்றியவர்தாம் பெருநாவலர் வள்ளுவர். தாம் வாழ்ந்த சமுதாயத்தையும் தமக்கு முன்னால் நிலவிய சமுதாயத்தையும் பிற **உலக** நாடுகளில் வாழ்கின்ற - வாழ்ந்த - சமுதாயத்தையும் ஒப்பு நோக்கி - சீர்தூக்கி - ஆராய்ந்து தோந்து தெளிந்தார். அவர்தம் வாய்மொழியில், வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் எனும் அதிகாரங்களை அமைத்தார். அவற்றால் ஏற்படும் கேடுகளைச் சுட்டி எச்சரிக்கை விடுத்தார். அன்று வாழ்ந்த சமுதாயம் உடனே மாறியது என்று கூறுவதற்கில்லை! ஆயின், குறளின் அறைகூவலுக்குப்

பயன் இல்லை என்று கூற முடியாது. அன்று முதல் இன்று வரை குறள் கூறும் கருத்துக்களை மறுப்போர் இல்லை! கருத்துக்களை ஏற்று அதன்படி நடக்க மனமில்லாதவரே மிகுதி. சான்றாக வள்ளுவர் அன்று கள் உண்ணாதே! என்றார். சிலர் அன்றும் கள்ளுண்டால் என்ன? என்று கேட்டனர். இன்றும் அளவாக உண்டால் என்ன? என்கின்றனர். வள்ளுவர் அதற்குப் பண்பாட்டு அடிப்படையில் விடை கூறுகிறார்.

"உண்ணற்க கள்ளை!" இது வள்ளுவம்; யாரோ உண்டால் என்ன? என்றனர் போலும்! "உணில் உண்க சான்றோரால் எண்ணப் பட வேண்டாதார்" என்பது எக்காலத்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை.

எனவே, நீதி நூல்கள் ஒரு காலக் கட்டத்தில் தோன்றின என்றால் அக்காலத்தின் !முந்திய நிலையால் என்பதை ஒப்பியல் அறிவால் அறியலாம்.

சமுதாயத்தை மேம்படுத்துவதற்கே கிரேக்க நாட்டில் சாக்கிரடீசு (Socrates), பிளேட்டோ (Plato), இசியெடு (Hesiod) போன்ற பெரும் புலவர்கள் சமுதாய அற நூல்களை இயற்றினர் எனலாம். தமிழகத்திற்கும் கிரேக்கத்திற்கும் உரோமானிய நாடுகளுக்கும் அன்று இருந்த வணிகத் தொடர்பால் அங்கு நிலவிய அறக்கருத்துக்களை வள்ளுவர் அறிய வாய்ப்பு உண்டு.

கிரேக்க உரோமானிய எழுத்தாளர்கள் தாம் உணர்த்திய ஒழுக்கத் தத்துவங்களைப் பெரிதும் பரந்து விரிந்த உரைநடை நூல்களாகவே எழுதினர். செனெக்கா, மார்க்கசு அரேலியசு போன்ற தத்துவ ஞானிகள் தம் நூல்களில் பல இடங்களிலும் காலத்தை வறிதே கழிக்காமல் அறத்திலும் மெய்யுணர்விலும் ஈடுபடுதல் சால நன்று என்று வலியுறுத்தியுள்ளனர். ஏனென்றால், வாழ்க்கை நிலையாமையுடைத்து.

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"

என்றும்,

"அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை"

என்றும் வள்ளுவரும் கூறுவர்.

பிளேட்டோவிடம் ஒருவன் சென்று உடல் நலமும் வளமும் சிறக்க என்ன செய்ய வேண்டும் என்று கேட்டானாம். நீ உன் பெற்றோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று பிளேட்டோ மறுமொழி விடுத்தாராம்.

இந்தப் பதிலின் அடிப்படையில்தான், கிரேக்க சமுதாயத்தைச் சீர்திருத்த நகர அரசுகள் (City States) எழுகின்றன. குடியரசு (Republic) என்ற நூலும் தோன்றுகிறது.

சமுதாய மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளை நீதி முறைகளாக வகுத்துச் சட்டமாக்கும் நிலையை அங்குக் காணலாம். சட்டங்கள் என்றும் வென்றதில்லை, பண்பாடே வெல்லும் பெற்றி வாய்ந்தது. நகர அரசுகள் (City States) கூறிய கருத்தைக் கிரேக்க நாட்டில் வேலையும் நாட்களும் (Works and Days) எனும் நீதிநூல் கூறுகிறது. இவ்வற நூல் 'இசியெடு' எனும் அறிஞரால் இயற்றப்பட்டது.

இசியெடு மனித இனத் தோற்ற வரலாற்றை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கிறார். ஒன்று, தங்க இனம்; இவர்கள் நல்ல நிறமும் உடல் வளமும் கொண்டவர்கள். இரண்டாம் இனம் வெள்ளி இனம். தங்க இனத்தினரினும் உடல்வளம் குறைந்தவர்கள். மூன்றாமவர் இரும்பு இனத்தினர்; இவர் கருமை நிறத்தினர்; குட்டையானவர்; கட்டையானவர். வெள்ளி இனத்தினருக்கும் இரும்பு இனத்தினருக்கும் இடைப்பட்டதொரு இனத்தினர் உண்டு! இவர்கள் வெங்கல இனத்தினர். உடல் தோற்றத்தையும் தோற்றப் பொலிவையும் வைத்து ஒப்பு நோக்கி மனித இனத்தையும் அவர்தம் சந்ததிகளையும் பாகுபாடு செய்து நீதிகளைச் சட்டங்களாக்கும் விந்தையைப் பிளேட்டோவின் நகர் அரசுகளில் காணலாம். பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூலின் 5-ஆம் புத்தகத்தில் வரும் உரையாடல் இக்கருத்துக்களின் நடைமுறைகளை விளக்கலாம்.

சிறைப்பிறவிகளை இத்தத்துவ ஞானிகள் ஒரு பொருட்டாகக் கருதினாரிலர். உறுப்பு நலன் குறையுற்ற குழந்தைகளைப் பிறந்த சில நாட்களுக்குள் மலையோரங்களிலும் திறந்த வெளியிலும் எறிந்து கொடிய விலங்குகளுக்கு இரையாகும்படி செய்யும் கொடிய பழக்கத்தை "இஞ்ஞானிகள்" (அஞ்ஞானிகள்) ஆதரித்தனர்.

தம் ஊரின் நடைமுறைகளை ஒப்புநோக்கி உலகிற்கு அறக் கருத்துக்களைக் கூறியவர் வள்ளுவர்.

பிளேட்டோ, இசியெடு போன்ற கிரேக்க நாட்டுப் பேரறிஞர்கள் காட்டிய நீதிநெறிமுறைகள் பரம்பரை அறிவியல் (genitics) அடிப்படையில் அமைந்திருக்கலாம். உடல் நலமும் உருவப்பொலிவும் உடையவர்க்குச் சிறந்த குழந்தைகள் பிறக்கலாம். ஆனால், ஒப்புநோக்கு நன்கு அறிந்த வள்ளுவர், பண்பாட்டின் அடிப்படையில் இக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல என்பதை,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பர். வடிவின் சிறுமை நோக்கி எள்ளாமை வேண்டும் என்பதை,

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னா ருடைத்து"

என உருவு நோக்கி மதித்தலைச் சிறுமை என வள்ளுவர் சீறுவர்.

உடல்ஊனம் உடையார் வாழத்தக்கவர் அல்லர் என்ற கருத்தை செந்நாப்போதார் அறவே மறுக்கிறார். அவர் குறைப் பிறவிகளையும் உடல் ஊனமுற்றோரையும் குறையுடையோர் அல்லர் என்கிறார். முழுப்பிறவிகளாயிருந்தும் முயற்சி அற்றவரே குறைப்பிறவிகள்; பழியுடையோர் என்பதை,

"பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி"

என்று உலகச் சமுதாயப் பண்பாட்டிற்குச் சிந்தனையால் ஒப்பு நோக்கி உரம் ஊட்டுவர்.

ஒப்பீட்டு அறிவு நம் இலக்கியப் பண்பாட்டைக் கணிக்கவும், தமிழ் இலக்கியக் கருவூலங்களுக்கு உலக மதிப்பைப் பெறவும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

நாடி மருத்துவம்

(மோ. கோ. கோவைமணி
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.)

நாடுதல் என்னும் பொருள்பட அமைந்த சொல்லே நாடி, 'நாடு' என்ற அடிச்சொல்லோடு இருத்தல் என்பதில் உள்ள இகரம் புணர்ந்து 'நாடி' என்றாகியது. இது ஒரு காரணப்பெயர். நாடுதல்என்றசொல் தேடுதல், ஆராய்தல், விரும்புதல், தெரிதல், ஒத்தல், அளத்தல், கிட்டுதல், நினைத்தல், மோப்பம் பிடித்தல், அளவுபடுத்தல், நரம்பு, நாடி போன்றவற்றைக் குறிக்கும். நாடி என்ற சொல்லை முன்னோர் பெரும்பான்மையாக இரண்டு துறைகளில் பயன்படுத்தி வந்துள்ளனர். ஒன்று,சோதிடத்துறை; மற்றொன்று, மருத்துவத்துறை.

''உயிரினங்களுக்கு ஏற்படும் முக்காலத்தின் மாற்றத்தை விளக்குவது சோதிடமும் மருத்துவமும் ஆகும். சோதிடம், அண்டத்தின் மூலம் உயிரினங்களுக்கு ஏற்படும் மாற்றத்தையும், மருத்துவம், பிண்டத்தின் மூலம் உயிரினங்களுக்கு ஏற்படும் மாற்றத்தையும் குறிக்கும். இவ்விரு துறைகளிலும் தேர்ந்தவர்கள் தங்களின் அனுபவங்களை நூல்களாக (சுவடிகள்) சமைத்துத் தந்துள்ளார்கள். அந்நூல்கள் சோதிட நூல்களாகவும் மருத்துவ நூல்களாகவும் இன்று நம்மிடையே மிளிர்கின்றன. இந்நூல்களெல்லாம் பெரும்பான்மை ஓலைச்சுவடிகளிலேயே பதிப்பாகாமல் இருத்தல் கண்கூடு. இக்கட்டுரை நாடி மருத்துவத்தைக் கொண்டாலும் நாடி சோதிடத்தையும் தொட்டுச் செல்கிறது.

நாடி நூல்கள்

1. **சோதிடம் :** சோதிடத்தில் ''துருவ நாடி, மத்திய சங்கிதை நாடி, சுக்கிர நாடி, தேவகோள நாடி, நவ நாடி, சுகர் நாடி, நந்தி நாடி, கௌசிக நாடி, அத்திரி நாடி, பீம நாடி, இடும்பி

நாடி, மும்மலக் கன்னி நாடி, பாலகௌமார நாடி, மார்க்கண்டேயர் நாடி, சகாதேவத நாடி. சந்திரகலா நாடி, பிருகுசங்கிதை நாடி போன்றவை நாடி நூல்களாகும். இந்நாடி நூல்களைப் பற்றியோ அவற்றில் உள்ள செய்திகள் பற்றியோ அவற்றின் நிலை பற்றியோ இக்கட்டுரை விவரிக்கவில்லை.

2. மருத்துவம் : சித்த மருத்துவத்தில் தனிப்பெரும் பிரிவாக வளர்ந்துள்ளது நாடி மருத்துவம். நாடி பற்றிய செய்திகளை ஓலைச்சுவடிகளிலிருந்து்ம், 'பதினெண்சித்தர்களின் 'நாடி சாத்திரம்' என்னும் நூலிலிருந்தும், 'சித்த மருத்துவத்தில் நாடி. என்னும் பதிப்பாய்வேடுகளிலிலிருந்தும் அறிய முடிகின்றது' இது தவிர பல சித்த மருத்துவ நூல்களிலும் சில அடிப்படைச் செய்திகளை மட்டுமே அறிய முடிகின்றது.

மருத்துவத்தில் காணப்படும் நாடி நூல்கள் பெரும்பாலானவை அகத்தியரின் பெயரில் காணப்பெறுகின்றன. அவை, வைத்திய ரத்தினச் சுருக்கத்தில் நாடி நிதானம், பரிபூரண நாடி, திரட்டுநாடி, குணவாகடத்தின் வைத்திய நாடி, குணவாகடத்தின் நோயின் நாடி, காவியத்தின் நாடி, வைத்திய சதக நாடி, வல்லாதியின் வைத்திய நாடிப் பரீட்சை, குறியடையாள நாடி, குருநாடி, சூடாமணி கயறு சூத்திரம், தீட்சை நாடி என்ற பன்னிரண்டு நூல்களாகும். மேலும் திருமூலர், தன்வந்திரி, சிவவாக்கியார், வியாசர், யூகிமுனி, தேரையர், புண்ணாக்கீசர்' சூதமுனி, வால்மீகர், மச்சமுனி, புலிப்பாணி, சட்டைமுனி, போகர், வரரிசி, இராமதேவர், இடைக்காடர், கொங்கணர், இராசமுனி ஆகிய ஆகிய பதினெண்மரின் நாடி நூல்களும் ; வாத நாடி, நாடிப் பரீட்சை. எழுபத்திராயிரம் நாடி இருக்கும் வகை, நாடித்திரட்டு, மரணநாடி போன்ற ஆசிரியர் பெயர் தெரியாத நாடி நூல்களும் உள்ளன.

இந்நூல்கள் எல்லாம் பெரும்பாலும் இன்றும் சுவடிகளாகவே உள்ளன. நூற்றுக்கணக்கான சுவடிகள் சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடி நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைகழகச் சுவடி நூலகம் போன்ற இடங்களில் உள்ளன. இவற்றிலிருந்து மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைத் தெரிவு செய்து தொகுக்கலாம்.

நாடி மருத்துவத்தில் அறியத்தகுவன

இம்மருத்துவச் சுவடிகளில் உள்ள செய்திகளைக் காணும் போது அவற்றின் பரப்பை நன்கு உணர முடிகிறது. இதில், உடல் செயற்பாட்டில் மனிதனுக்கு அடிப்படைத் தேவையான சுவாசம், சுவாசத்தின் மூலம் உடலின் தன்மைகளை அறிய உதவும் முக்கிய நாடிகள் (10), பத்து நாடிகளின் இருப்பிடம், காது நாடிகள், நாடி ஐந்து, நாடி ஒன்றே, நாடியை எப்படிப் பார்க்க வேண்டும், நாடிகளின் நடை (வாத, பித்த, சிலேத்தும, பூத, குரு), நாடிகளை அறியும் விரல்கள், பொதுத்தன்மைகள், நாடிகளுக்குண்டான குணங்கள், நாடிகளின் மாத்திரை அளவு, கால நிலையால் நாடிகளைக் காணுதல், வயதால் நாடியின் நிலையறிதல். உறுப்புக்களின் நிறத்தால் நோயறிதல, நாடிகள் தினந்தோறும் சிறப்புறுங் காலமறிதல், தொந்த நாடிகள், தொந்த நாடிகளின் பொதுவியல்புகள், நாடி தெரியாததற்குக் காரணங்கள், நோய் தோன்றுவதற்கான காரணங்கள், நோயின் வகைகள் (4,448), நோய் உள்ளவர்க்கான அறிகுறிகள், உண்ணும் உணவில் ஏற்படும் மாறுதல்கள், நீண்ட நாள் வாழ்வதற்கான அறிகுறிகள், மரணக்குறிகள் என்பன போன்ற அடிப்படைச் செய்திகள் முதற்கொண்டு இந்நூல்களில் காணப்பெறுகின்றன.

நாடி மருத்துவம் - ஓர் அறிமுகம்

இப்பகுதியில் நாடித்தொகை, நாடி பார்க்கும்முறை, நாடி செல்லும்முறை, நாடி பார்க்கும் கை, நாடிகள் பிறக்கும் இடம், நாடிகளின் இயல்புகள், தொந்த நாடிகள், தொந்த நாடிகளின் குணங்கள், உடற் தத்துவம் போன்ற செய்திகள் இடம் பெறு கின்றன.

1. நாடித்தொகை

நாடியானது உடம்பில் உந்திச் சுழியில் இருந்து எழுந்து கீழ் மேலாய்ப் பேய்ப்பீர்க்கன் கூடுபோல் உடலைப் பின்னி நிற்கும். இவை உடல் முழுவதும் எழுபத்தீராயிரம் நாடிகளாக உள்ளன. இவ்வெல்லா நாடிகளும் குதிசந்து, காமியம், உந்தி, காது, மூக்கு, கண்டம், கரம், புருவம், உச்சி எனப் பத்து இடங் களில் அமைந்திருக்கின்றன.

எழுபத்தீராயிரம் நாடிகளுள்ளும் பத்து நாடிகளே முக்கிய மானவை. அவை இடகலை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை,

புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு என்பனவாகும். இப்பத்து நாடிகளுள் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்னும் மூன்று நாடிகளே மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

> '' பத்தின்பே ரிடையி னோடு பிங்கலை சுழிமுனை பாரில்
> அத்திசிங் குலைகாந் தாரி அலம்புரு டன் குதமே சங்கினி
> ... ...
> இப்படி எழுபத்தீ ராயிரம் நரம்பெனும் நாடி கண்டு
> ஒப்புறு நாடி பார்க்கும் வைவினை உரைப்பக் கேளாய்
> வெப்புறு வாத பித்தம் கிலேற்பன மென்ன மூன்று''

2. நாடி பார்கும்முறை

முன் கையின் ஆரை எலும்பின் மேற்புறத்திலுள்ள பெரு நாடியை மணிக்கட்டிற்குக் கீழே ஒரு அங்குலம் தள்ளி ஆள்காட்டி விரல், நடுவிறல், மோதிரவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் அழுத்தியும், தளர்த்தியும் பார்க்கும்போது ஆள்காட்டி விரலில் உணர்வது வாதம் என்றும், நடுவிரலில் உணர்வது பித்தம் என்றும், மோதிரவிரலில் உணர்வது சிலேத்துமம் என்றும் அறியலாம்.

> ' பெருவிர லங்கு லத்தில் பிடித்துடன் நடுவே தொட்டால்
> ஒருவிர லோடில் வாதம் உயர்நடு விரலில் பித்தம்
> தருமணி விரலி லய்யந் தானென வறிந்து சொல்லே''

3. நாடி செல்லும்முறை

வாத பித்த சிலேத்துமம் மூன்றும் உணர்வதற்கு அவை செல்லும் நடை பயன்படுகிறது. வாதமானது அன்னம், கோழி, மயில் போலும், பித்தமானது ஆமை, அட்டை போலும். சிலேத்துமமானது தவளை, பாம்பு போலும் நடக்கும். இந்நடை ஆண்களுக்கு மட்டும்தான். பெண்களுக்கு வாதமானது பாம்பு போலும், பித்தமானது தவளை போலும், சிலேத்துமமானது அன்னம் போலும் நடக்கும்.

> '' வாகினி அன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
> ஏகிய ஆமை அட்டை இவையென நடக்கும் பித்தம்
> போகிய தவளைப் பாம்பு பொல்லாத சிலேத்துமந்
> தானோ''

4. நாடி பார்க்கும் கை

முன் கையின் ஆரை எலும்பின் மேற்புறத்தில் உள்ள பெரு நாடியானது இடது கையிலும் வலது கையிலும் காணப் பெறுகின்றது. ஆண்களுக்கு வலக்கையின் பெருநாடியையும், பெண்களுக்கு இடக்கையின் பெருநாடியையும் பார்க்க வேண்டும்.

'' நானெனப் புருடர்க் கெல்லாம் நாடிதான் வலக்கை யாகுந்
தேனெனு மடவார்க் கெல்லாந் திடம்பெற இடக்கை பாரே''

5. நாடிகள் பிறக்கும் இடம்

வாத பித்த சிலேத்துமம் மூன்றும் தமக்கென தனித்தனியே ஓர் இருப்பிடத்தை வைத்துக் கொண்டுள்ளன. அந்தந்த இடத்தில் இருந்துதான் அவ்வவ் நாடிகள் பிறக்கின்றன. தொப்புளில் இருந்து வாத நாடியும், உதிரத்தில் இருந்து பித்த நாடியும் பிறக்கின்றன.

'' வாதத்தின் வீடு தொப்புள்
ஓதிய பித்தத்தின் வீடு உதிரமே சேற்ப னத்துக்கு
ஆதிய மிதைய ... ''

6. நாடிகளின் இயல்புகள்

வாத பித்த சிலேத்துமம் மூன்றும் தமக்கெனத் தனித்தனி இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இவ்வியல்புகள் ஒன்றுடனொன்று இயைபுடையனவாக இல்லை. உடல் குளிர்ந்து நாவில் புளிப்பு காணுமாயின் வாதம் என்றும், உடல் சூடாக இருந்து நாவில் கசப்பு காணுமாயின் பித்தம் என்றும், உடல் வியர்த்து நாவில் இனிப்பு காணுமாயின் சிலேத்துமம் என்றும் உணர்தல் வேண்டும்.

'' சேத்தும மெழுந்தி ரிக்கில் தித்திப்பு நாவி லேறும்
ஏத்திய கசப்பு மீறில் எழும்பிடும் பித்த மாகும்
மாத்திய புளிப்பு மீறில் வளர்ந்திடும் வாத மாகுஞ்
சேத்துமந் தண்ணீர் பித்தந் தீயதுக் காற்று வாதம்''

இதுபோல் பலப்பல இயல்புகளைக் கொண்டிருத்தலைக் காண முடிகிறது.

7. தொந்த நாடிகள்

தொந்த நாடி, ஒரு நாடி மற்றொரு வகை (வாத, பித்த, சிலேத்தும) நாடியுடனோ, அதேவகை நாடியுடனோ சேர்ந்து நடக்கும் நாடியாகும். தொந்த நாடியானது ஒன்பது வகைப் படும். அவை, பித்தத்தில் பித்தம், பித்தத்தில் வாதம், பித்தத்தில் சிலேத்துமம், வாதத்தில் வாதம், வாதத்தில் பித்தம், வாதத்தில் சிலேத்துமம், சிலேத்துமத்தில் சிலேத்துமம் சிலேத்துமத்தில் வாதம், சிலேத்துமத்தில் பித்தம் எனப்படும்.

வாத பித்த சிலேத்துமம் மூன்றும் ஒன்றுடன் ஒன்று சம நிலையில் இணைந்து நடக்கும்போது ஒன்பதுவகையான தொந்த நோய்கள் உண்டாகின்றன. அதேபோல் நாடிகள் ஒன்றுடன் ஒன்று இணையும்போது, ஒன்றில் இருந்து ஒன்று அதிகமாக இருக்கும் போது ஆறு வகையான தொந்த நோய்கள் உண்டாகின்றன.

வாதம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்கும் இருக்கும் போது வாதபித்த தொந்தம் எனவும், வாதம் இரண்டு பங்கும் சிலேத்துமம் ஒரு பங்கும் இருக்கும் போது வாதசிலேத்துமத் தொந்தம் எனவும், பித்தம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்கும் இருக்கும் போது பித்தவாத தொந்தம் எனவும், பித்தம் இரண்டு பங்கும் சிலேத்தும் ஒரு பங்கும் இருக்கும்போது பித்தசிலேத்துமத் தொந்தம் எனவும், சிலேத்துமம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்கும் இருக்கும் போது சிலேத்துவாதத் தொந்தம் எனவும், சிலேத்துமம் இரண்டு பங்கும் பித்தம் ஒருபங்கும் இருக்கும்போது சிலேத்துமப்பித்த தொந்தம் எனவும் ஆறு வகைப்படும்.

8. தொந்த நாடிகளின் குணங்கள்

வாத பித்த சிலேத்துமம் மூன்றும் தம் இயல்பான மாத்திரை அளவான ஒன்று, அரை, கால் என்னும் முறையான அளவில் இருந்து மாறுபடும் போது உடலில் வாத பித்த சிலேத்துமம் மூன்றும் தத்தம் இயல்புகளைக் காட்டுகின்றன. அதில் வாதத் தின் குணங்கள் அதிகமாக இருக்கும் போது வாதத்திற்குட்பட்ட நோய்களும், பித்தத்தின் குணங்கள் அதிகமாக இருக்கும்போது பித்தத்திற்குடபட்ட நோய்களும், சிலேத்துமத்தின் குணங்கள் அதிகமாக இருக்கும்போது சிலேத்துமத்திற்குட்பட்ட நோய் களும் உண்டாகும்.

நாடி, வாதத்தில் வாதமாய் இருக்கும்போது உடல் நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும்; வற்றும்; உடல் பதறும். உணவு உட்கொள்ள முடியாது; வாதத்தில் பித்தமாய் இருக்கும் போது வாய் குளறிப்பேசும்; கால் குளிரும்; வீக்கம் உண்டாகும்; வயிறு விம்மி குடலைப் புறட்டும்; வாதபித்த தொந்தமாய் இருக்கும் போது வாய்வு மிகுந்து உதிரம் விம்மும்; உடல் கனத்து வலிக்கும்; மாதர் மேல் மோகம் கொள்ளச் செய்யும். உண்ணும் உணவு செறிக்காது; சிந்தனை அதிகமாகும்; வாதத்தில் சிலேத்துமாய் இருக்கும் போது உடல் வீங்கும்; வலிக்கும்; தலை பாரமாக இருக்கும்; குணம் மாறும்; உடல் வெளுக்கும்; உணவு செல்லாது; நாளுக்கு நாள் வீக்கம் அதிகரிக்கும்; வாதசிலேத்துமத் தொந்தமாய் இருக்கும் போது உடல் வலிக்கும்; கை கால்கள் திமிர்த்துக் காட்டும்; உதிரத்துள்ளே ஊதையும் மிகுந்து விம்மும்.

நாடி, பித்தத்தில் பித்தமாய் இருக்கும் போது வாய் பிதற்றச் செய்யும்; தலைகிறுகிறுக்கும்; சுழலும், சக்தி அதிகமாக வெளியேறும். உடல் இளைக்கும்; அத்தி போல் உடல் உலரும்; உலர்ந்த உடல் வெளுக்கும்; பின்னர் வீக்கம் உண்டாகும்; பித்தத்தில் வாதமாய் இருக்கும் போது பிடரி, கால், கை குத்தும்; உடல் குறுகும்; புத்தி இழக்க நேரிடும்; பொறுமை நீங்கி கோபம் உண்டாகும்; பித்தவாத தொந்தமாய் இருக்கும் போது அதிகமான வெப்பத்தால் உடல் மற்றும் கண்கள் எரியும்; நெஞ்சு வறண்டுதாகம் உண்டாகும்; பித்தத்தில் சிலேத்துமமாய் இருக்கும் போது வாய் குளறும்; பிதற்றும்; வாந்தி உண்டாகும்; வாயில் நீர் ஒழுகும், தலை சுற்றும், வயிற்றில் வலியுண்டாகும். பிடரி வலிக்கும்; பித்தசிலேத்துமத் தொந்தமாய் இருக்கும் போது உடலில் பசி இராது, அடிக்கடி உதிரம் விம்மும், நயன நீரானது மஞ்சள் போலாகும். பேய்கள்போலப் பிதற்றிப் பேசுவர்.

நாடி, சிலேத்துமத்தில் சிலேத்துமமாய் இருக்கும் போது விழிகள் வட்டம் கொள்ளும், உயிர் பிரியும்; சிலேத்துமத்தில் வாதமாய் இருக்கும் போது நரம்பெல்லாம் வலித்து நிற்கும், பிடரியில் இசிவுண்டாகும், விழிகள் மேல் நோக்கி இருக்கும், நாக்கு வாய் குழறும்; சிலேத்துமவாதத் தொந்தமாய் இருக்கும் போது வாயில் இனிப்பு அதிகமாக ஊறும், பசி உண்டாகும், தவனத்தைப் பற்றி நிற்கும்; சிலேத்துமத்தில் பித்தமாய் இருக்கும்

போது உண்பவை எல்லாம் கசப்பாய் இருக்கும், நாக்கு புளிப்பாகவும் இனிப்பாகவும் மாறிமாறி இருக்கும், பேச்சுத் தடுமாறும், கோழை (கபம்) கட்டும், குரல் வேறுபடும், கண்களில் பீளை சேரும்; சிலேத்துமப்பித்தத் தொந்தமாய் இருக்கும் போது சன்னி உண்டாகும், செவி கேட்காது. நாக்கு இனிப்பாகும், பத்தியமும் செறியாது.

9. உடல் தத்துவம்

மனித உடலில் நோய் உருவாவதை அடிப்படையாகக் கொண்டு அதை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். ஒன்று தூல உடல்; இது ஏழு தாதுக்களை ஆதாரமாகக் கொண்டு பிண்ட தத்துவ நிலையில் விளங்குவது; மற்றொன்று, காரண உடல் இது ஐந்து பூதங்களான மண், நீர், நெருப்பு, காற்று, வெளியினை ஆதாரமாகக் கொண்டு அண்ட தத்துவ நிலையில் விளங்குவது; இன்னொன்று சூட்சம உடல் இது வாய்வுக்களான பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் எனப் பத்தும் நாடிகளான இடகலை, பிங்கலை, சுழிமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புருடை, சங்கினி, குரு எனப்பத்தையும் ஆதாரமாகக் கொண்டு சராசர தத்துவ நிலையில் விளங்குவது. இந்தச் சூட்சம உடலில்-சன்னி, சயம், குட்டம், நீரிழிவு, வாதம், குன்மம் முதலான பிணிகளுக்கு வகைகளும் அவ்வவ் வகைகளுக்குண்டான மருந்துகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

செய்ய வேண்டுவன

மேலே குறிப்பிடப்பட்ட நான்கு பெரும் நூலகங்களில் காணப்படக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட சுவடிகளில் காணப்பெறும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களையெல்லாம் திரட்டி ஒரு தொகுப்பாய்வு செய்து பதிப்பிக்க வேண்டும். இவ்வாய்வால் நாடிகள் பற்றியும் அவற்றின் தன்மைகள் பற்றியும் பல சித்தர்கள் கொண்டுள்ள கருத்துக்களின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறிந்து அச்சித்தர்களின் கொள்கைகளையும் தெளியலாம். நாடி பற்றிய செய்திகளைக் குறிக்கும் சுவடிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சித்த மருத்துவத்தில் நாடி மருத்துவம் ஒரு தனிப்பெரும் பிரிவாக இருந்து வளர்ந்து வந்துள்ளது என்பது கண்கூடு. அச்சுவடிகளை அவற்றின் அடிச்சுவடு மறையாமல் காப்பதும் அவற்றை வெளியுலகிற்குக் கொண்டு வருவதும் நம் கடப்பாடாகும்.

சிவஞான முனிவர் உரையில் இலக்கணக் கூறுகள்

(டாக்டர். ஆ. ஆனந்தராசன்
சைவ சித்தாந்தத் துறை,
மதுரை காமரர்சர் பல்கலைக் கழகம்.

சித்தாந்த நூல்களுக்கு உரை காண்பதற்கு மிகுந்த விழிப் புணர்ச்சியும், நூலாசிரியன் கருத்துணர்ந்து கூறுந் திறனும் வேண்டும். சொற்களுக்குக் கிடந்த படியே பொருள் கூறின், ஒரோவிடத்து சித்தாந்தத்திற்கே மாறான பொருள் கூறிய தாய் முடியும். அத்தகைய இடங்களில் இலக்கணத்தின்' துணை கொண்டு சித்தாந்தக் கருத்திற்கு மாறாகாதபடி பொருள் காணும் திறம் சிவஞான முனிவரின் தனிச்சிறப்பாகும். எடுத்துக் காட்டாக ஓரிடத்தை மட்டும் இங்குச் சுட்டலாம்.

'மெய்ஞ்ஞானம் தானே விளையும் விஞ்ஞானகலர்க்கு' என்று சிவஞான போத வெண்பா (நூற்பா. 8) கூறுகிறது. இதற்கு நேராகப் பொருள் கூறின், பக்குவமுடைய உயிர்களுக்கு ஞானம் தானே உண்டாகும் என்றாகிறது. இக்கருத்து சைவ சித் தாந்தத்திற்கு உடன்பாடன்று. இறைவன் உணர்த்தினாலன்றி உயிர்க்கு ஞானம் உண்டாகாது என்பதே சித்தாந்தத் துணிவு. ஆதலால், இவ்விடத்தில் சொற்கிடக்கை முறைப்படி பொருள் கொள்ளாமல் சித்தாந்தத்திற்கு இணங்கப் பொருள் காணுதல் வேண்டும். அதற்கு இலக்கணத்தின் துண்ணையைக் கொள்கிறார் சிவஞான முனிவர். 'விளைவிக்கும்' என்பதே 'விளையும்' என விவ்விகுதி குன்றி நின்றது எனக் குறிப்பிட்டு, 'அரசன் எடுத்த ஆலயம்' என்னும் வழக்குப் போல்வது இது என்றும் சுட்டுகிறார். 'இவ்வாறு உரையாது வியஞ்சகமின்றித் தானே விளையும் என்று உரைப்பின் சிவாகமம் எல்லாவற்றோடும் முரணும் என்றொழிக என்றும் அவர் குறித்துள்ளமை காணலாம்.

பல பொருள் பயக்கும் ஒருசொல் வருமிடத்தில் அவ்விடத்திற்கு எப்பொருள் கொண்டால் சிறக்குமோ அப்பொருள் கொண்டு, அதற்குத்தக அச்சொற்கு இலக்கணங் கூறிச்செல்லுதல் முனிவர் இயல்பாகும். சிவஞான போதத்தில் பன்னிரண்டாம் சூத்திரம் அணைந்தோர் தன்மையைக் கூறுவதாகும். உடற்பற்றும் உலகப் பற்றும் நீத்து அருள் வயப்பட்டு நிற்கும் அடியார்களே அணைந்தோர் எனப்படுவர். அவர்களுக்கு உடம்பு உள்ள வரையில் அவர்கள் அறிவும், இச்சையும், செயலும் ஓரொருகால் உலகப் பொருள்களை நோக்கிச் செல்லுதலும் கூடும். அப்போது பாசங்கள் முன்போல வந்து பற்றாதபடி அவர்கள் விழிப்பாயிருந்து அவற்றைப் போக்கிக் கொள்ளுதல் வேண்டும். இறைவனது திருவடியை மறக்கும்படி செய்யும் அவ்வியல்பினையுடைய பாசங்களை 'செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம்மலம்' என்று சிவஞான போதம் குறிக்கின்றது. இங்கே இறைவனது திருவடி 'நோன்றாள்' எனச்சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. 'நோன் தாள்' என்ற தொகைச் சொல் வலியினையுடைய திருவடி எனவும் பொருள்படும்; தாங்குகின்ற திருவடி எனவும் பொருள்படும். இவ்விரு பொருள்களுள் இவ்விடத்திற்கு ஏற்புடையது எது என்று எண்ணிப் பார்க்கிறார் முனிவர். இறைவனை அணைந்து நிற்கும் அன்பர்களைப் பற்றிய நூற்பா ஆதலால், தம் செயலற்று நிற்கும் அவர்களைத் திருவருள் தாங்கி நிற்றலை உணர்த்துவதே இவ்விடத்திற்கு இயைவதாகும் எனக் கொண்டு, நோன்றல் என்பதற்குப் பொறுத்தல் என்று பொருள் எழுதுகிறார். அப்பொருளுக்குஏற்ப நோன்றாள் (நோல்+தாள்) என்பதனை வினைத்தொகையாகக் கொள்ளுகிறார்.

ஒரு சொல்லுக்கே ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கணக் குறிப்புகளைச் சுட்டிப் பல பொருள்களும் பொருந்தும்படி அச்சொல்லின் நீர்மையை விளக்கிக் காட்டுதல் சிவஞான போத ஒன்பதாம் நூற்பாவில், கானல் நீரைக் குறிக்க 'உராத் துனைத் தேர்' என்ற தொடர் கொண்டு, கண்ணுருபு விரித்து, நின்றுழி நில்லாது பரந்து திரிதற்கண் அதிவேகமுடைய பேய்த்தேர் என்று பொருள் கொள்கின்றார். இனி, 'உரா' என்பதை எதிர்மறைப் பெயரெச்சமாக வைத்து, பறவாக் குளவி, பாயா வேங்கை என்றாற் போல ஒருவரான் ஊரப்படாத வேகத்தை

யுடைய தேர் எனப் பிறிதொரு பொருளும் உரைக்கின்றார். அப்பொருட்கு 'உரா' என்பதைக் குறுக்கல் விகாரமாக அவர் கொள்ளுகின்றார்.

மங்கல வாழ்த்தில், மலைவில்லார் அருளிய பொல்லார் இணை மலர்களை நல்லார் புனைவர் என்று கூறப்பட்டுள்ளது. 'அருளிய' என்பதைச் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு, சிவபெருமான் தமக்கு அருள் புரியும் பொருட்டு விநாயகப் பெருமான் திருவடிகளை நல்லார் வணங்குவர் எனப் பொருள் கூறுகிறார். இதனை மேலும் விளக்குவாராய், 'உலகத்துப் புதல்வர்கள் மாட்டுச் செய்யும் வழிபாடு தந்தையர்க்குக் கழி பேருவகை பயப்பிக்குமாகலின் அந்நயம் பற்றி அங்ஙனம் கூறியது' என்று எழுதுகிறார். இனி, அருளிய என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு, சிவபெருமான் தந்தருளிய விநாயகக் கடவுள் என உரைத்தலும் பொருந்தும் எனக் காட்டியுள்ளார்.

நூலாசிரியன் சொல்லக் கருதியும் சிற்சில காரணங்களால் சொல்லாது விட்ட செய்திகளை வருவித்து உரைத்தல் உரையாசிரியர் கடமையாகும். அவ்வாறு உரைத்தற்கு இலக்கணமே அவர்களுக்குக் கைகொடுத்து உதவுகிறது. அங்ஙனம் உதவும் இலக்கண உத்திகளில் இரட்டுற மொழிதல் என்பதும் ஒன்று. இரட்டுற மொழிதல் என்பது ஒரு தொடரை இரண்டு பொருள்படச் சொல்லுதலாகும். திருக்குறளில் 'பெரியாரைப் பிழையாமை' என்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்கையில், இரட்டுற மொழிதல் என்பதனால் பெரியார் என்பது ஆற்றலால் பெரியாராய வேந்தர் மேலும், தவத்தாற் பெரியராய முனிவர் மேலும் நின்றது'' எனப் பரிமேலழகர் உரைத்துள்ளமை அறிதற்குரியது. இனிச் சிவஞானமுனிவர் இவ்வுத்தியினை ஆண்டுள்ள இடங்களில் ஒன்றைக் காண்போம்.

இறைவன் உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருந்து நடத்துகிறான் என்று சைவ சித்தாந்தம் கூறும். ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்னும் இம்மூன்று நிலைகளையும் ஒருங்கே கொள்ள வேண்டும் என்று அது வலியுறுத்தும் இவ்வாறு இறைவன் உயிர்களோடு கொண்டுள்ள தொடர்பினை மெய்கண்டார் 'அவையே தானேயாய்' என்ற தொடரால்

உணர்த்தியுள்ளார். அத்தொடர் அவையேயாய், தானேயாய். என்று பொருள் கொள்ளும்படி அமைந்துள்ளது. அவையேயாய் என்பது உயிர்களோடு இறைவன் ஒன்றாயிருத்தலையும், தானே யாய் என்பது அவன் உயிர்களின் வேறாயிருத்தலையும்குறிக்கும். அவன் உயிர்களோடு உடனாயும் இருக்கிறான் என்னும் கருத்து அத் தொடரில் நேரே கூறப்படவில்லை. மெய்கண்டாரின் மாணவராகிய அருணந்தி சிவம் இம்மூன்று நிலைகளையும் ஒரு சேரக் கூறியுள்ளார். 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' என்பது அவரது தெளிவான கூற்று. ஆதலால் 'அவையே தானே யாய்' என்ற மெய்கண்டார் கூற்றில் உடனாதல் என்ற நிலையும் அமைந்திருத்தலைக் காட்டினால்தான் கருத்து முழுமை பெறும் என்பதை உணர்கிறார் சிவஞானமுனிவர். அந்நோக்கில் இரட்டுற மொழிதல் என்னும் உத்தியை இங்கு ஆளுகிறார். அவையேயாய் தானேயாய் எனவும், அவையே தானேயாய் எனவும் இருமுறையாகக் கூறிப் பொருள் கொள்ளுகிறார். 'அவையே தானேயாய்' என்பது அவையும் தானுமாதல் ஆகிய உடனாதலை உணர்த்தும் என்று சுட்டுகிறார். இவ்வாறு இரட்டுற மொழிந்து கொண்டு பொருளுரைக்கும் இடங்கள் பலவாகும்.

சொல்லையோ கருத்தையோ வருவித்து நிரப்புவதற்கு உரையாசிரியர்க்குத் துணை செய்வன சொல்லெச்சம், அவாய் நிலை, உபலக்கணம், குறிப்பெச்சம் முதலியனவாகும். சிவஞான முனிவர் இவற்றைப் பயன்படுத்தியுள்ள இடங்கள் சில வருமாறு:

சிவஞான போதத்து ஐந்தாம் நூற்பாவில் 'மெய்வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா' என நான்கு பொறிகளே கூறப்பட்டுள்ளன; கூறப்படாதசெவியினைச் சொல்லெச்சத்தால் வருவித்துக் கொள்கிறார் முனிவர்.

பத்தாம் நூற்பா உதாரண வெண்பாவில் 'இங்குளி வாங்கும் கலம்' என்ற தொடர் வருகிறது. அதற்குப் பெருங் காயத்தினின்றும் அதன் வாசத்தை வாங்கிக் கொள்ளும் பாத்திரம் என்று பொருள் எழுதுகிறார். வாங்குவதற்குச் செயப் படு பொருளாகிய வாசம் என்பதனை அவாய் நிலையான் வரு வித்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

சரியை கிரியை யோகங்கள் ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா என எட்டாம் நூற்பா வார்த்திகத்தில் கூறப்பட்டுள்ளது. இது உபலக்கணமாகலின் ஞான தீக்கையும் ஞானத்தைக் காட்டியல்லது தாமே மோட்சத்தைக் கொடாது எனக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

அவையடக்கத்தில், முதல்வனை உணர்ந்த பெரியோர்கள் எம்மை இகழ மாட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது. 'ஆகலான் எம்மாற் செய்யப்படும் இந்நூலையும் அவ்வாறு கைக்கொள்வர்' என்ற கருத்தினைக் குறிப்பெச்சத்தால் வருவித்துக் கூறுகிறார்.

இவ்வாறு பல அரிய சொற் பொருள் நலங்களைக் காணு தற்கு இலக்கணக் கூறுகள் அவர்க்குத் துணையாய் நிற்றலைக் காணலாம்.

புதுக்கவிதையில் வாழ்க்கைச் சிந்தனைகள்

(டாக்டர். இரா. மோகன்
இணைப்பேராசிரியர் மதுரை
காமராசர் பல்கலைக்கழகம்)

இருபத்தொன்றாம் நூற்றாண்டு மனிதன் மாமனிதனாக இல்லை; மாறாக, அவன் 'மினிதன்' ஆகிவிட்டான். இன்றைய அறிவியல் வளர்ச்சியால் உலகம் சுருங்கியது போன்று, மனிதனின் உள்ளமும் சுருங்கிவிட்டது. இன்று மனித வாழ்க்கை என்பது சிக்கலும் போராட்டமும் மலிந்ததாய், குழப்பமும் நெருக்கடியும் மிக்கதாய் ஆகிவிட்டது. இன்றைய மனிதன் பன்முகங்கள் கொண்டவனாக – சிந்தனை, சொல், செயல் இவற்றில் தனக்குத் தானே முரண்பாடுகள் பெற்றவனாக விளங்குகிறான். அண்மைக்காலக் கவிதைகள் இன்றைய மனிதனைப் பற்றியும், அவனது வாழ்க்கையைப் பற்றியும் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

'வாழ எத்தனை மணிநேரம் ?'

இன்றைய மனிதன் வேலை செய்வதற்கென்று ஒரு திட்டம் வைத்திருக்கிறான்; இத்தனை மணிநேரம் தான் வேலை செய்வது என்று ஒரு கணக்கு வைத்திருக்கிறான். அதேபோல் அவன் தூங்குவதற்கு என்றும் ஒரு வரன்முறை கொண்டிருக்கிறான்; இத்தனை மணிநேரம் தூங்குவது நல்லது என்றும் கண்டுபிடித்து வைத்திருக்கிறான். ஆனால் அவன் வேலை, தூக்கம் இரண்டினும் மேலான வாழ்க்கையைப் பற்றி யாதொரு சிந்தனையும் கவலையும் இல்லாமல் இருந்து வருகிறான்; விலை மதிப்பற்ற வாழ்க்கை தன் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தும், அவன் வாழ்க்கையின் அருமையை உணராமல் மனம்போன போக்கில் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறான். இவ்வுண்மையினை விக்கிரமாதித்தனின் சிறுகவிதை ஒன்று நயமாக எடுத்துக்காட்டுகின்றது. அக்கவிதை இதோ,

'எட்டு மணி நேரம்
வேலை செய்ய வேண்டும்
எட்டு மணி நேரம்
தூங்க வேண்டும்
எத்தனை மணி நேரம்
வாழ வேண்டும்?'

வேலை செய்வதற்கு எட்டு மணி நேரமும், தூங்குவதற்கு எட்டு மணி நேரமும் ஒதுக்கத் தெரிந்த இன்றைய மனிதனுக்கு, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கென்று – வையத்துள் வாழ் வாங்கு வாழ்வதற்கென்று ஒரு சில மணித்துளிகளையேனும் ஒதுக்கத் தெரியாதது–ஒதுக்க முன்வராதது வியப்பினும் வியப்பு; வேதனையிலும் வேதனை.

சோற்றுக்கு அலையும் வாழ்க்கை

இன்றைய மனிதனுக்கு இயற்கையின் அழகை–அற்புதத்தை, அதிசயத்தை அனுபவித்து மகிழ நேரம் இல்லை; கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து,உற்று இயற்கையை இன்புறுவதற்கு அவனுக்கு மனம் இல்லை. சோறு கண்ட இடம் சொர்க்கம், காசேதான் கடவுள்; தான் உண்டு தன் வேலை உண்டு என்ற சித்தாத்தங்களின் பிடியில சிக்கித் தவிக்கிறான் இன்றைய மனிதன்; எதற்கெடுத்தாலும் 'நேரம் இல்லை' என்று சொல்வதற்குத் தான் இன்று அவனுக்கு 'நேரம் இருக்கிறது!' கல்யாண்ஜியின் கவிதை ஒன்று மனிதனின் இல்வாழ்க்கைப் போக்கை அழகுறச் சித்திரிக்கின்றது.

சூரியனை
ஆற்றங்கரை மணலை
தொட்டாற்சுருங்கிச் செடியை
பாசஞ்சர் ரயிலின்
அற்புத இரைச்சலை
பட்டாம் பூச்சியைத்
தொலைத்துவிட்டு
நாற்காலிக் கால்களில்
நசுங்கிக் கிடக்கிறது
சோற்றுக்கலையும் வாழ்க்கை'

சூரியன், ஆற்றங்கரை மணல், தொட்டாற் சுருங்கிச் செடி' பாசஞ்சர் ரயிலின் அற்புத இரைச்சல், பட்டாம் பூச்சி என்று தன்னைச் சுற்றிலும் விதவிதமான அற்புதங்களைக் கொண்டிருந்தும், அவற்றை ஏறெடுத்தும் பாராமல். அலுவலகத்தில் வேலை பார்க்கும் நாற்காலியே கதி என்று கிடக்கிறான் இன்றைய மனிதன். இயற்கை தரும் இன்பங்களையும் நுகரத் தெரியாமல், வாழ்க்கை தரும் இன்பங்களையும் நுகர முடியாமல் 'தேடிச் சோறு நிதம் தின்று, வேடிக்கை வாழ்வு' வாழ்ந்து கொண்டிருக்கிறான் அவன்

'தப்பிக்க முயலும் வாழ்க்கை'

இன்றைய மனிதன் ஒருகுறிக்கோள், அந்தக் குறிக்கோளை முன்னிறுத்திய இடைவிடாத முயற்சி எனத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை; மாறாக, தன்னைச் சூழ்ந்திருக்கும் நெருக்கடியிலிருந்து தற்காலிகமாகவேனும் தப்பித்தலையே அவன் வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறான். வாழ்க்கை என்பது அவனைப் பொறுத்த வரையில் ஒரு தேடல் அன்று; தப்பித்தலே. வேறு வகையாகச் சொன்னால் அவனுக்குப் போராடும் மனப் பான்மை இல்லை; நழுவிச் செல்லும் மனப்பான்மையே உண்டு பஞ்சுவின் கவிதை ஒன்று இன்றைய மனிதனின் வாழ்க்கையை இங்ஙனம் அலசி ஆராய்கிறது.

'எண்ணெய் தடவினோம்
போர்வையால் மூடினோம்
வலைகட்டிப் பார்த்தோம்
சுருள்வத்தி வைத்தோம்
பசை தடவினோம்
மின்னணுக் கருவியில்
மாத்திரை கொளுத்தினோம்
கொசுக்கடியிலிருந்து
இப்படித்
தப்பிக்க முயற்சிப்பதே
வாழ்க்கையாயிற்று
அன்றிலிருந்து இன்று வரை !'

கொசுக்கடி என்ற துன்பத்திலிருந்து தப்பிக்க மனிதன் அன்றிலிருந்து இன்றுவரை மேற்கொண்டுள்ள முயற்சிகள்தாம்

எத்தனை எத்தனை! எண்ணெய்—போர்வை—வலை—சுருள்வத்தி—பசை—மின்னணுக் கருவியில் மாத்திரை—இப்படிக் காலந்தொறும் அவன் எடுத்த தற்காலிக நடவடிக்கைகள் தான் எத்தனை எத்தனை! ஆனால், கொசுவே உற்பத்தி ஆகாமல் இருக்கும் வகையில் அவன் தன் சுற்றுப்புறச் சூழலைத் திருத்தி அமைக்க முன்வரவில்லை; கொசுவை ஒழிப்பதற்கான நிலையான முயற்சிகள் - இவற்றைக் குறியீடாகக் கொண்டு இன்றைய மனித வாழ்வையே விமரிசனம் செய்துள்ளார் கவிஞர்.

'விலகிச் செல்லும் வாழ்க்கை'

இன்றைய மனிதனுக்குக் கனவு காணத் தெரிகிறது; கற்பனை செய்யத் தெரிகிறது; திட்டம் தீட்டத் தெரிகிறது. ஆனால் கனவை நனவாக்க – கற்பனையை உண்மையாக்க – திட்டத்தை நடைமுறையாக்க அவனுக்குத் தெரியவில்லை; தெரியவில்லை என்பதைவிட முடியவில்லை என்பதுதான் உண்மை. அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ – அவன் விரும்பியோ விரும்பாமலோ – வாழ்க்கை அவனை விட்டு மெல்ல மெல்ல, விலகி விலகி ஓடிக்கொண்டே இருக்கிறது. லக்ஷ்மாவின் கவிதை ஒன்று இங்கே மனங்கொளத்தக்கது. அக்கவிதை வருமாறு:

'வாழ நிரம்பக் கனவுகள்
கண்களில் மிதப்பு மாதிரி
கனவூறும் போது
உடலின்
சோம்பலான இடுக்கு வழி
ஒழுகிப் போகின்றது
நிகழ்காலம்'

ஒரு புறம் இன்றைய மனிதனின் விழிகளில் கனவூறித் ததும்புகின்றது; ஒளிமயமான எதிர்காலம் கண்ணில்தெரிகிறது; ஆனால், மறுபுறம் அவனது உடலின் சோம்பலான இடுக்குவழியே ஒழுகிப் போகின்றது நிகழ்காலம்! கனவு காண்பதால் மட்டும் பயன் இல்லை; காரியமும் ஆற்றத் தெரிய வேண்டும். அப்போது தான் நிகழ்காலக் கனவு எதிர்கால நனவாகும். பிறிதொரு கோணத்தில் இவ்வுண்மையை எடுத்துரைக்கிறார் ஜோசப்-டி-சாமி என்னும் கவிஞர்.

'பிடிக்கச் செல்லும் குழந்தைக்கு
காற்று
காகிதத்தை நகர்த்தி நகர்த்தி
விளையாட்டுக் காட்டுவதாய்
வாழ்க்கை எனக்கு'.

கண்ணெதிரே விழுந்து கிடக்கும் பட்டத்தை எடுப்பதற்காகக் காலடி எடுத்து வைக்கிறது குழந்தை; காற்றோ, பட்டத்தை நகர்த்தி நகர்த்தி, விளையாட்டுக் காட்டுகிறது. குழந்தையின் நிலையில் மனிதன்; காற்றாக வாழ்க்கை – இப்படி அழகிய உருவமாக அமைகிறது இக்கவிதை.

'இல்லாமல் இருப்பது'

இந்த உலகில் மனிதன் இருப்பதென்றுதான் வருகிறான்; தன் இருப்பை உறுதி செய்து கொள்ள – தன் பெயரை நிலை நிறுத்திக் கொள்ள அவன் என்னென்னவோ செய்கிறான். வீடு கட்டுகிறான்; வீட்டிற்குத் தன்பெயரைச் சூட்டுகிறான்; நூல் எழுதுகிறான்; நூலால் தன் பெயர் விளங்கும் என்று எதிர்பார்க் கிறான்; குழந்தை பெறுகிறான்; தன் குழந்தையால் தன்பெயர் விளங்கும் என்று நம்புகிறான். ஆனால் எல்லாமே மாறிப் போ கின்றன; அவன் கையை விட்டுப் போகின்றன; அவன் எதிர் பார்த்ததற்கு மாறாக நடக்கின்றன. அவன் பாடுபட்டுக் கட்டிய வீடு அவனுக்கு அடுத்த தலைமுறையினரால் அவனது காலத்தி லேயே இன்னொருவருக்கு விற்கப்படுகின்றது; நூல்களில் அவன் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாம் கால வெள்ளத்தில் எதிர்த்து நிற்க முடியாமல் அழிந்துபோகின்றன : மலையாய் நம்பியிருந்த அவனுடைய பிள்ளைகளே அவன் மனத்திற்கு மாறாக நடக் கிறார்கள்; அவனை விட்டு விலகிச் செல்கிறார்கள். மனித வாழ் வின் இந்த விசித்திரமான முரண்பாட்டை நகுலனின் சிறுகவிதை ஒன்று நெஞ்சை அள்ளும் வகையில் சித்திரிக்கின்றது :

'இருப்பதென்றுதான்
வருகிறோம்
இல்லாமல்
போகிறோம்'

'இருப்பதென்றுதான் இந்த உலகிற்கு வருகிறோம்; இருப்பதற்காக என்னென்னவோ செய்கிறோம்; ஆனால் முடிவில் இல்லாமல் போகிறோம் ; இதுதான் மனித வாழ்க்கை' — இத்தனை சிந்தனைகளையும் உள்ளடக்கி 'இல்லாமல் இருப்பது' என இக் கவிதைக்கு நயமாகப் பெயர் சூட்டியுள்ளார் கவிஞர்.

'வாழ்க்கை என்பது யாதெனின்...'

வாழ்க்கை என்பதற்கு இதுவரை எத்தனையோ பேர் எத்தனையோ விளக்கங்களைக் கூறியுள்ளனர். ஆனால் அண்மைக் காலக் கவிஞர் ஒருவர் (வி. பழநிகுமார்) வாழ்க்கை என்பதற்குப் பின்வரும் விளக்கத்தைத் தந்துள்ளார் :

'வாழ்க்கை என்பது யாதெனின்
யாதொன்றும் சொல்ல இயலாத தீமை'

நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து வரும் இன்றைய மனிதனைப் பற்றிய ஒரு வித்தியாசமான – ஆனால் நடப்பியல் பாங்கில் அமைந்த படப்பிடிப்பு இது. இங்ஙனம் அண்மைக்காலக் கவிதைகளில் இன்றைய மனித வாழ்க்கை பற்றிய பல்வேறு நுட்பமான சித்திரிப்புகளைக் காண்கிறோம்.

துன்னம்பெய் கோவணம்

(பேரா. டாக்டர் ந. மாணிக்கம்
தியாகராசர்கல் லூரி, மதுரை,

சைவ சமயம், சிவபரம் பொருளின் அருட் சிறப்புக்களை எடுத்துரைக்கும் வகையில், தத்துவப் பொருள்கள் பொதிந்து விளங்கும் புராண நிகழ்ச்சிகளையும், கதைகளையும் பெற்றுள் ளது. இறைவன் திருவுருவ வருணனைகள் பலவும், தடத்த நிலையில் அமைந்து, அரிய வரலாறுகளையும் உண்மைகளையும் உணர்த்தி நிற்கின்றன. மாணிக்க வாசகர் இயற்றியருளிய திருவாசகத்தில் அமைந்துள்ள 'திருச்சாழல்' என்னும் பகுதி புராண வரலாறு பற்றிப் பௌத்தர்கள் எழுப்பிய தடைகளுக்கு விடைகூறும் முறையில் பாடப்பெற்றது என்பர். கந்த புராணத்தில் தட்சகாண்டப் பகுதியில் அமைந்துள்ள ததீசி உத்தரப் படலம், தக்கன் வினவிய 22 வினாக்களுக்கு விடைகூறும் முறையில் அமைந்துள்ளது. புராணக் கதை நிகழச்சிகளில் அடிப்படையில் இறைவன் பெருமைகளையும், சிறப்புக்களையும் எடுத்துரைக்கும் பாங்கில் விளக்கங்கள் இருப்பதோடு, சாத்திர நுட்பங்களை உட்கொண்டனவாகவும் இருத்தல் உணர்த்தப்படும். சிவபெருமான் முப்புரங்களை எரித்த நிகழ்ச்சி கதைப் போக்கில் இறைவனுடைய ஆற்றலை உணர்த்துவதோடு, மும்மலங்களை இறைவன் போக்கும் 'சாத்திர உண்மையையும் உள்ளடக்கி நிற்பதைத் திருமந்திரம் சுட்டிக்காட்டும். இவ்வகையில், இறைவன் கோவணதாரியாக விளங்குதல் பற்றிப் பேசும் திருச்சாழல் பாடல் சிந்தனைக்குரியதாக அமைந்துள்ளது.

திருச்சாழல் : துன்னம்பெய் கோவணம் :

"என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந்தான் ஈசன் துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும்பூ என்னேடீ? மன்னுகலை துன்னு பொருள் மறைநான்கே வான்சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ" என்பது பாடல். எல்லா

ஐசுவரியங்களையும் உடைய ஈசுவரன் — பொன்னும் மெய்ப் பொருளும் தருபவன் — பொன்னாகவும், மணியாகவும், முத்தாக வும்திகழ்பவன் துன்னம்பெய் கோவணத்தைக்கொண்டுள்ளான். அரசக் கோலத்திலும் முருகப்பெருமானைக் காணுதல் போல் இறைவன் கோவணம் தரித்துள்ளான் என்பதிலும் அப்பெரு மானின் எளிவந்த தன்மையை உணர்த்தும் குறிப்பு கொள்ளத் தகும். ஆயின் மாணிக்கவாசகர், கோவணத்தைக் குறியீடாகக் கொண்டு விளக்கியுள்ள கருத்துப் பாடலின் பிற்பகுதியில் இது இடம் பெற்றுள்ளது. நிலைபெற்ற நூல்களில் பொருந்திய பொருள்களையுடைய நான்கு மறைகளையும் இறைவன் தன் அரையில் கட்டும் கயிறாகவும், வேதப்பொருள்களைக் கோவண மாகவும் கொண்டுள்ளான் என்பது அவர் தரும் விளக்கம். இவ் வாறு வேதங்களை அரைக் கயிறாகவும், வேதப்பொருள்களைக் கோவணமாகவும் கொள்ள வேண்டும் என்று உணர்த்தியுள்ள நிலையில், 'துன்னம்பெய் கோவணம்' என்று கடைப்பகுதியில் கூறியுள்ள தொடர் ஈண்டு அணுக்கமான ஆய்வுக்கு உரிய தாகிறது.

கீளொடு தைத்தகோவணம்

''துன்னம்பெய் கோவணம்-கீளொடு பொருந்தத் தைத்த கோவணம் ... ... சரடு, கயிறு, அஃது இங்குத் துறவர் கட்டும் கீளினைக் குறித்தல், 'வான்சரடு' எனச் சிறப்பித்ததனால் பெறப் படும்'' என்று அறிஞர் விளக்குவர்.

'' இழையார்ந்த கோவணமும் கீளுமொழிலாருடையா
(திருஞானசம்பந்தர். 194 : 5)

'' உடைமலிந்த கோவணமும் கீளும் தோன்றும்''
(நாவுக்கரசர். 18 :4)

'' கீளார் கோவணமும்'' — (சுந்தரர் 240)

என்று அருளாளர்கள் பாடல்களில் கீளுடன் பொருந்திய கோவண உடை இறைவனுக்குக் கூறப்பெறுகிறது.

எனவே, இடையில் கயிறாக அடையும் கீளொடு பொருந் தத் தைத்த கோவணம்' என்பது ஒரு கருத்தாக அமைகிறது. இவ்வகையில் வேதம் கீளாகவும், வேதப்பொருள் கோவணமா கவும் அமைவதால், வேதத்தையும் வேதப்பொருளையும் பொருந்

தும் வகையில் இணைத்துக் கொண்டுள்ள குறிப்புப் புலனாகிறது. எனலாம். ''மறை பற்றுக் கோடும், பொருள் அதனைப் பற்றி நிற்பதும் ஆதல் பற்றி, அவை முறையே சரடும், கோவணமும் ஆயின'' என்ற விளக்கம் ஈண்டு நினைக்கத்தகும்.

கிழிந்து தைத்த கோவணம் :

ஆயின், 'துன்னம்பெய் கோவணம்' என்பதற்குக் கீளொடு பொருந்தத் தைத்த கோவணம் என்று பொருள் கொள்வதற்கு மாறாகத் தைத்த கோவணம், அதாவது கிழிந்துபோன நிலையில் அதனை விட்டுவிடாமல் மீளவும் கிழிந்த பகுதியை இணைத்துத் தைத்து விளங்கும் கோவணம் என்று பொருள் கொள்வதற்கும் இடம் உண்டு என்பது தோன்றுகிறது.

'' தைத்த துணியினைத் தானணியும் கோவணமாகக் கொள்ளுகின்ற அத்தன்மையன் என்று கூறும் உரை இப் பொருளை உட்கொண்டது என்று கருத இடமுண்டு.

தைத்த ஆடை என்பது புதிதாகத் தைத்த ஆடையைக் குறிப்பதோடு, உலக வழக்கில், கிழிந்து தைத்த ஆடையைப் பெரும்பாலும் குறிப்பதாகும்.

'' வேற்றிழை நுழைந்த துன்னற் சிதாஅர்''
(பொருநர் : 80–81)
'' துன்னற் சிதாஅர்'' – (ஷை : 154)
'' வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்''
(புறநானூறு : 69)

என்ற பகுதிகள் ஈண்டுக் கருதத்தக்கவை.

எனவே, கிழிந்துவிட்ட நிலையில் மறுபடியும் அக் கிழிசலைத் தைத்து ஒழுங்கு செய்துள்ள கோவணம் என்று பொருள் கொள்வதற்கும் இடமிருப்பதால், இப்பொருளுக்கேற்ப வும் வேதப்பொருள் தொடர்பாக எண்ணிப்பார்க்க வாய்ப்பு உள்ளது. (கிழிந்ததைத் தைக்கும்போது தைத்தது தெரியத் தைத் தலும், தைத்தது (அதிகம்) தெரியாத வகையில் இழையாடுதலும் இக்கால நிலையில் அறியத்தகும்).

கிழிந்த காரணம், தைத்த காரணம் :

கோவணம் என்பது வேதப்பொருள் என்று கொள்வதால், கோவணம் கிழிந்ததற்கான காரணமும், கிழிந்ததை எறிந்து

விடாமல் தைத்துப் பயன்படுத்துவதற்கான காரணமும் ஆராயத் தக்கனவாகின்றன.

வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டு தோன்றிய சமயங்கள் இந்திய நாட்டில் வைதிக சமயங்கள் என்று வழங்கப் பெறுகின்றன. அகச்சமயங்கள் ஆறும் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என்னும் அகப்புறச் சமயங்கள் ஆறும்; தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் புறச்சமயங்கள் ஆறும் ஆகப் பதினெட்டுச் சமயங்களும் வேதத்தை ஒப்புக் கொள்ளும் வைதிக சமயங்கள் எனப்பெறுகின்றன. வேதப் பொருளை விளக்கும் முறையில் கருத்து வேறுபாடுகள் பெருகி இத்துணைச் சமயங்களாயின என்பது வெளிப்படையான உண்மை. இச்சமயங்களுக்கெல்லாம் மூலம் வேதமே என்பதும் உண்மை. பல்வேறு சமயங்களாக வேறுபட்டு நிற்றற்குக் காரணம், வேதப் பொருள்களை விளக்கும் நிலையில் எழுந்த கருத்து வேறுபாடுகளே ஆதலால், இந்த விரிசலை உணர்த்தும் குறிப்பாகக் கோவணம் கிழிந்த நிலை கருதத்தகும் எனலாம். எனினும் இவ்வேறுபாடுகளை வளரவிடாமல் அமைதிப்படுத்தி அனைவரையும் ஒன்றுபடுத்தும் முயற்சி தேவையானதாகும். பிரம்ம சூத்திரம், இவ்வகையில் வேத உபநிடதக் கருத்துக்களின் மாறுபட்ட கருத்து விளக்கங்களை அமைதிப்படுத்தி ஒருங்கிணைத்து ஏற்ற விளக்கங்களை எடுத்துக்கூற எழுந்தது என்பர். ஆயின் பிரம்மசூத்திரத்துக்கும் பற்பல சமய தத்துவ விளக்கங்களுடன் கூடிய உரைகள் எழுந்துள்ளன என்பது சுட்டத்தகும்.

வேறுபட்ட கருத்து விரிசல்களால் வேதப்பொருள் இழக்கப் பட்டு விடக்கூடாது; சிதறுண்டு அழிந்து போய் விடக்கூடாது. ஒருங்கிணைத்து முழுமையாகக் கட்டிக்காக்க வேண்டும். வேதப் பொருள் விளக்கம் வேண்டா என்று நீக்கிவிடவும் முடியாது. ஆதலால் கிழிந்த கோவணத்தைத் தைத்துச் சீர்செய்து கொள்வது பொருத்தமாகத் தோன்றியது.

வேதத்தை ஒப்புக்கொள்ளும் சமயங்களிலும் சாங்கியம், மீமாஞ்சை முதலிய கடவுளை ஒப்புக் கொள்ளாத சமயங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒரு நிலையாகும்.

எனவே பரம்பொருளைப் பற்றிய கருத்து வேறுபாடுகளால் பிளவுகள் தோன்றினும், அமைதிப்படுத்தி, ஒருங்கிணைத்து, மூலப்பொருளை விட்டுவிடாமல் கைக்கொள்ள வேண்டும் என்பதைக் கிழிந்த கோவணத்தைத் தைத்துச் சீர் செய்து இறைவன் அணிந்துள்ளமை குறிக்கிறது என்லாம்.

மூலத்திராவிடமொழி வினையமைப்பில் எதிர்மறை

(டாக்டர் ஏ. ஆதித்தன்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.)

பெரும்பான்மையான திராவிட மொழிகளில் காலப் பொருண்மையும் எதிர்மறைப்பொருண்மையும் வெவ்வேறு உருபுகளால் உணர்த்தப்பெறுகின்றன. திராவிடமொழி வினையமைபபுக்களில் கால உருபுகளும் எதிர்மறை உருபுகளும் துணைநிலை வழக்கில் (Complementary Distribution) அமையப்பெறும் என அறிஞர் கருதுவர். திராவிடமொழிகளின் வினையமைப்பில் காணப்பெறும் காலம், எதிர்மறை இரண்டிற்குமிடையே உள்ள தொடர்பினைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மூலத்திராவிட மொழிக்குரித்தான இறந்த காலம், இறப்பல் காலம் என்னும் இருவகை வேறுபாடே பெரும்பான்மையான திராவிட மொழிகளில் காண முடிகின்றது. இம்மொழிகளில் நிகழ்காலத்தின் தோற்றம் பிற்காலத்ததேயாகும்.

வினைச்சொற்களில் எதிர்மறையினைச் சுட்டும் உருபுகள் வரின் காலத்தைக் குறிக்கும் உருபுகள் வருவதில்லை எனவும், கால உருபுகள் இல்லாமையின் இவ்வினைகள் முக்காலத்திற்கும் ஒத்தவை எனவும் அறிஞர் கருதுகின்றனர். இதனால் இக்கால அறிஞர் சிலரும் கால உருபுகளும் எதிர்மறை உருபுகளும் துணைநிலை வழக்கில் வருவதாகக் கருதுகின்றனர்.

மூலத்திராவிட மொழியில் (Proto Dravidian) உருபன் நிலையில், (Morphological level) எதிர்மறை வினைகள் ‘அடிச்சொல் + எதிர்மறை உருபு + பால்காட்டும் உருபு’ என்ற அமைப்பில் முக்காலத்திற்கும் பொருந்துமாறு அமையப் பெற்றுள்ளன எனவும், இறந்தகால எதிர்மறையும் இறப்பல்கால எதிர்மறையும் தொடரியல் கூறுகளால்தான் உணர்த்தப்பெறுகின்றன எனவும் திராவிட மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

நடுத்திராவிட மொழிகளில் காணப்பெறும் எதிர்மறை வினையமைப்பாகிய 'அடிச்சொல் + எதிர்மறை உருபு + கால உருபு + பால் காட்டும் உருபு' என்பதனை மூல நடுத்திராவிட மொழிக்கு மீட்டுருவாக்கம் (Reconstruction) செய்து இதனைப் பிற்கால வளர்ச்சியாக அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

வினை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரித்தாகி வருவதன் பொருட்டே இத்தகு பெயரினைப் பெறுகின்றது. எனவே எதிர்மறை வினைகள் தொடரில் செயலாற்றுங்கால் ஒரு குறிப்பிட்ட காலத்தினைச் சுட்டும் வகையில்தான் அமையும். எதிர்மறை வினையமைப்பில் கால உருபு இல்லாதிருக்கும் பொருட்டுக் காலமும் எதிர்மறையும் துணைநிலை வழக்கில் வருகின்றன என்பது பொருந்துமாறில்லை.

ஒவ்வொரு திராவிட மொழியிலும் காணப்பெறும் எதிர் மறை வினையமைப்பினை ஈண்டு விரிவாகக் காணலாம்.

தமிழ், மலையாளம், கோடா, துளு, கோண்டா, கோண்டி குலி, குயி, கொலாமி, நாய்க்கி ஆகிய மொழிகளில் உருபன் நிலையில் இறந்தகாலம், இறப்பல்காலம் ஆகிய இரண்டிற்கும் ஏற்ப இருவகை எதிர்மறை வினையமைப்புக்கள் காணப்படுகின்றன. ஈண்டுச் சிலவிடத்து எதிர்மறை உருபும் கால உருபும் ஒரே வினையமைப்பில் இணைந்து வருவதனைக் காணமுடிகின்றது.

	இறந்தகாலம்	இறப்பல்காலம்
தமிழ்	var a-t-u "வாராமல்" [கோகாஞ்ஞான்]	var-a—n "வரமாட்டாள்" [பாராய்வர்]
மலையாளம்	Kot–a–nn–an "அவன் கொடுக்கவில்லை" [வராய்பெ]	par–a–y-var "அவர்கள் பார்க்கு மாட்டார்கள் [வாராய்க்வெ]
கோடா	var–ay-p–e "நான் வரவில்லை" [கல்திஜ]	var–ay–kv–e "நான்வரமாட் டேன் [கல்புஜ]

துளு	kal-ṭi-j-a	kal-pu-j-a
	“நீ படிக்கவில்லை”	“நீ படிக்க மாட்டாய்
	[நெஸெத]	[கி எ]
கோண்டா	nes-?-et-a	ki-?-e
	“நான் அறியவில்லை”	“நான் செய்யமாட்டேன்”
	[ஹூட்வதங்]	[ஹூடுங்]
பெங்கோ	hur-va-tan	hur-u-n
	“நான் பார்க்கவில்லை”	“நான்பார்க்க மாட்டேன்”
	[தினதி]	[தினெனு]
குயி	tin-?a-t-i	tin-?-enu
	“நீ சாப்பிடவில்லை”	“நான் சாப்பிட மாட்டேன்
	[பாய்பதி]	[பாயொதி]
குவி	pay-pa-t-i	pay-?o-di
	“நீ அடிக்கவில்லை”	“நீஅடிக்க மாட்டாய்
	[ஸீஎதன்]	[ஸீஎன்]
கொலாமி	si-e-t-an	si-e-n
	“நான்கொடுக்க வில்லை”	“நான் கொடுக்க மாட்டேன்”
	[ஆடெதன்]	[ஆடென்]
நாய்க்கி	ar-e-t-an	ar-e-n
	“நான்விளையாடவில்லை”	“நான் விளையாட மாட்டேன்.

குருக், மால்டோ மொழிகளில் இந்தோ - ஆரிய மொழிகளின் தாக்கத்தால் இத்தகு உருபனியல் அமைப்புடை எதிர்மறை வினையமைப்புக்கள் அழிந்து போகலாயின. இவ்வட திராவிட மொழிகளில் தொடரியல் நிலையில்தான் காலப் பொருண்மையுடன் கூடிய எதிர்மறை உணர்த்தப்படுகின்றது.

பெரும்பான்மையான திராவிடமொழியியல் அறிஞர்கள் உருபன் நிலையில் முக்காலத்திற்கும் பொருந்தி வரும் எதிர்மறை வினையமைப்பினையே மூலத்திராவிட மொழிக்குரியதாக மீட்டுருவாக்கம் செய்துள்ளனர். எதிர்மறை உருபும் கால உருபும் இணைந்துவரும் வினை அமைப்பு சில தென் திராவிட மொழிகளிலும், பல நடுத்திராவிட மொழிகளிலும் காணப்பெறுவதால் இப்பான்மையினையே மூலத்திராவிட மொழிக்கு மீட்டுருவாக்கம் செய்தல் இயலும்.

மூலத்திராவிட மொழியில் இருவகைக் காலங்களுக்கேற்ப எதிர்மறை வினையமைப்பில் இறந்தகால அமைப்பு, இறப்பல் கால அமைப்பு என இருவகை இருந்திருத்தல் வேண்டும். முதன் முதலில் மலையாளம், கோடா. துளு தவிர்ந்த ஏனைய நடு-தென் திராவிட மொழிகளில் ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள இருவகை அமைப்பில் இறப்பல் கால எதிர்மறை வினையமைப்பிலுள்ள கால உருபு அழிந்துபோயிருக்கலாம்.

பின்னர், இறந்தகால எதிர்மறை வினையமைப்பிலுள்ள கால உருபு கோண்டா, பெங்கோ, குயி, குவி, கொலாமி, நாய்க்கி தவிர்ந்த ஏனைய நடு-தென் திராவிட மொழிகளில் அழியப் பெற்றிருக்கலாம். இந்நிலையில்தான் பல்வேறு திராவிட மொழிகளில் சில தொடரியல் கூறுகளால் வெவ்வேறு கால எதிர்மறைப் பொருண்மை சுட்டப்பெறலாயிற்று.

இறந்தகால வினையெச்சத்தோடும், செயவெனெச்சத்தோடும் எதிர்மறை வினையடியிலிருந்து ஆக்கம் பெற்ற சொற்களை இணைப்பதன் வாயிலாக இறந்தகால எதிர்மறைப் பொருண்மை உணர்த்தப்பெற்றது.

தமிழ் : வந்து இலன் (வந்திலன்)
வர இல்லை (வரவில்லை)

கோண்டி : vaccillor 'வரவில்லை'
(வாச்சில்லோர்)

கன்னடம் : bandile 'வரவில்லை'

இறப்பல் கால வினையாலணையும் பெயர்களோடும் செயவெனெச்சத்தோடும் எதிர்மறை வினையடியிலிருந்து ஆக்கம்

பெற்ற சொற்களை இணைப்பதன வாயிலாக இறப்பல் கால எதிர்மறைப் பொருண்மை உணர்த்தப்பெற்றது.

தமிழ் : வரமாட்டான்
கன்னடம் : maduvadu illa 'அது செய்யாது'
(மாடுவது இல்ல)

உருபன் நிலையில் மூலத்திராவிட மொழியில் கால அமைப்புடன் கூடிய எதிர்மறை வினையமைப்பினை மீட்டுருவாக்கம் செய்தால் பெரும்பான்மை நடுத்திராவிட மொழிகளிலும் காணப்பெறும் கால உருபுடன் கூடிய இறந்தகால எதிர் மறை வினையமைப்புக்களையும், கால உருபிலா இறப்பல் கால எதிர்மறை வினையமைப்புக்களையும் எளிமையாக விவரித்தல் இயலும்.

மேலும் இறந்த கால உருபுடன் கூடிய எதிர்மறை வினையமைப்பு பல பழங்குடியினரின் திருந்தா மொழிகளில் காணப்படுவது இக்கருத்தினை உறுதிப்படுத்தும் வயில் அமையப் பெற்றுள்ளது.

கால உருபு எதிர்மறை வினையமைப்பில் காணப்பெற்றுக் காலப்போக்கில் இது அழிந்துபட்டது என்று கொள்வதே எதிர் மறை வினையமைப்பில் கால உருபு பிற்காலத்தில் சேர்க்கப் பெற்றது என்பதைவிட ஏற்புடையதாக அமையும். ஈண்டுக் கூறப்பெற்ற செய்திகளினின்றும் சில முடிவுகளுக்கு வருதல் இயலும்.

மூலத்திராவிட மொழியில் எதிர்மறை வினையமைப்பில் கால உருபுகள் அமைந்திருந்தன. இக்கால உருபுகளுக்கேற்ப இறந்தகால, எதிர்மறை வினையமைப்பு என இருவகை அமைப் புக்கள் காணப்பட்டன.

மூலத்திராவிட மொழியின் காலத்தே இறப்பல் கால எதிர் மறை வினையமைப்பிலுள்ள காலஉருபு அழியஆரம்பித்துள்ளது.

தென் நடு, வடதிராவிட மொழிகள் பிரிந்த காலத்தில் நடுத்திராவிட மொழிகள் நீங்கலாகப் பெரும்பான்மை திராவிட மொழிகளில் இறந்தகால, எதிர்மறை வினையமைப்பிலுள்ள இறந்தகால உருபு அழிய ஆரம்பித்துவிட்டது.

எதிர்மறை வினையமைப்பிலுள்ள இறந்தகாலஉருபுகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் தொடரியல் கூறுகளால் வெவ்வேறு கால எதிர்மறைப் பொருண்மையினைச் சுட்டும் பான்மை வளர ஆரம்பித்துள்ளது.

வருக்கப் போராட்ட நாவல்களில் சாதியும் கடவுளும்

(தெ. திருஞானமூர்த்தி,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி)

மக்களின் வறுமையைப் போக்க வருக்கப்போராட்டத்தைக் கண்ட பொதுவுடைமை வாதிகள் அதற்கு உரிய முறையில் போராடாமல் இருந்தது வரலாற்றில் பேரவலம் ஆகும். வருக்கப் போராட்டம் வெற்றி பெற்றால் சாதி, கடவுள் பற்றிய நம்பிக்கைகள் காலாவதியாகிவிடும் என்றபொதுவுடைமை வாதிகளின் நிலைப்பாடு அவ்வியக்கம் சார்ந்த படைப்பாளிகளின் படைப்பை எங்ஙனம் பாதித்தது என்பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. இங்கு ஆய்வுக்குரிய நாவல்களாக சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்', டி. செல்வராசின் 'மலரும் சருகும்' பொன்னீலனின் 'கரிசலும்' எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சாதி

நம் வாழ்வை மிகுதியாகப் பாதிக்கும் ஆற்றல் மிக்க நிறுவனமாகச் சாதி நிலவுகிறது பிறப்பில் குத்தப்படும் முத்திரை பல்வேறு சடங்குகளில் வளர்ந்த திருமண உறவில் ஆழமாக வேரூன்றி நிலைத்து நிற்கிறது. முதலாளித்துவத் தொழில் முறையால் சாதித்தன்ளை சிறிது நெகிழ்ச்சியடைந்தாலும், பெரும்பாலோர் வாழ்க்கை வேளாண்மையில் கட்டுண்டு கிடப்பதால் அதன் கரங்கள் இறுக்கமாக உள்ளன.

சாதியைப் பார்ப்பனியத்தின் விளைச்சலாகப் பார்த்தவர்கள் செயலிழந்து போனார்களே அல்லாமல் சாதி செயலிழக்கவில்லை. மேலும் உழைப்புப் பிரிவினையே சாதியின் தோற்றுவாய்க்குக் காரணம்என்ற பொதுவுடைமைக் காரர்களும் உழைப்புக்கு அப்பாலும் பாயும் சாதியின் வேகத்தைக் காலம் கடந்து உணரத் தலைப்பட்டுள்ளனர்.

போராட்டத்தைப் பின்னுக்கிழுக்கும் ஒரு பேராயுதமாகச் சாதி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஓர் உண்மையான புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சியானது பண்பாட்டுப் புரட்சியின் ஓர் அங்கமாகச் சாதி எதிர்ப்பை மேற்கொள்ள வேண்டும்; இதனை அது புரட்சிகர அரசியல் இயக்கத்திற்கு இணையாகவும் மேற் கொள்ள வேண்டும்; அடித்தளம், மேற்கட்டுமானம் ஆகிய இரண் டிலுமே சாதி இருப்பதால் அதன் அடிப்படை இன்னும் அசைக்கப்படவே இல்லை என்ற கே.வி. ஆரின் (வர்க்கமும் சாதி யும் – ப. 97) கருத்தும் இதனை உறுதிப்படுத்துகிறது.

பொதுவுடைமைக் கட்சிசார்ந்த இலக்கிய வாதிகள் வருக்கப் போராட்டம் வெற்றி பெற்றால் சாதி தானாகவே ஒழிந்து விடும் என்று எண்ணுகின்றனர். மேலும் வருக்கப் போராட்டத் தில் பங்குபெறும் ஒருவன் சாதி நோயிலிருந்து விடுதலை பெறு கிறான் என்று சிக்கலை எளிமைப்படுத்துகின்றனர். இப்போக்கு சிக்கலின் ஆழத்தை உணராமையின் விளைவே ஆகும். பொது வுடைமை அமைப்பிலுள்ள அரசியல்வாதிகளின் சாதியக்கணிப்பு இந்தியச் சமூகச் சூழலுக்குப் பொருந்தாத நிலையில், அவ் வமைப்பு சார்ந்த படைப்பாளிகளின் படைப்பில் சாதியச் சித்திரிப்பு எங்ஙனம் உள்ளது என்பதைக் கண்டறிதல் வேண்டும்.

சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' என்ற நாவல் (புதினம்) பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டத்தினை யும் வாழ்க்கை நிலையினையும் படம் பிடிக்கிறது. ஆங்கிலேயரின் குடியேற்ற ஆட்சியால் (Colonial Rule) இந்தியாவில் நிறுவப் பெற்ற பஞ்சாலைகளில் இரண்டாம் உலகப் போர் காரண மாக ஏற்பட்ட மாறுதல்களின் பின்னணியால் வருக்கப் போராட்டம் விரிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இட்லரின் பேராசையால் எழுந்த உலகப்போர் தொடங்கிய பின் கவனிப்பாரற்றுக் கிடந்த கைத்தறித் தொழிலுக்குத் திடீரென்று ஒரு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. போர்காலத் தேவை யினாலும், இராணுவ விரிவாக்கத்தாலும் ஆலைத்துணிக்கு ஏற் பட்ட அருமைப்பாடு பொது மக்களிடையே துணிப் பஞ்சத்தை ஏற்படுத்தியது. அசுரப் பசிகொண்ட போர்முனை நாடுகளில்

கைத்தறித் துணிக்கு ஏற்பட்ட விலை ஏற்றத்தைக்கூடக் காரண காரியத்தோடு ஆராயும் ரகுநாதன், சாதிச் சிக்கலைச் சூழலுடன் இயைபுபடுத்தி ஆராயவில்லை.

முதலியார், தேவர், கவுண்டர், மூப்பனார், அரிசனங்கள் போன்றோரை நாவலாசிரியர் குறிப்பிட்டிருந்தாலும், இவர்களுக்கிடையே வருக்க முரண்பாட்டிற்கு அப்பால் நிகழும் சாதி முரண்பாட்டைக் காட்டத் தவறிவிட்டார். மேலும், வருக்கப் போராட்டத்தில் சாதி உணர்வு சாம்பலாகப் போய் விடுவது போல் காட்டுகிறார். "தம்மைப் போன்றவர்கள் தொட்டுப் பழகவே கூசும் இனத்தவரான அந்த விவசாயிகள், சின்னச் சாதிச் சனங்களாக அந்த அரிசனங்கள் தங்கள் சங்கத்தின் மீதும் தலைவர்கள் மீதும் எவ்வளவு நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், மேலும் அந்த அரிசனங்களோடு மேல்சாதி விவசாயிகளும் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பதைக் கண்டு அவர் வியப்படைந்தார்" என்ற நாவலாசிரியரின் கூற்று உண்மை நிலையைவிட அவரது உள்ளக் கிடக்கையையே புலப்படுத்துகிறது. வருக்கப் போராட்டத்தில் சாதி பெறும் இடத்தினை வறட்டுத் தனமாகப் பொருத்திக் காட்ட முயலுவது ரகுநாதனின் மேலோட்டமான மனநிலையை வெளிக்காட்டுகிறது.

பொன்னீலனின் 'கரிசலில்' பல்வேறு சாதியர்கள் இடம் பெறுகிறார்கள் என்பதே தேடிக் காணவேண்டிய நிலையிலுள்ளது. நிலவுடைமையாளர்களின் வருக்கமும் சித்திரிக்கப் பட்டிருக்கிற அளவுக்கு அவர்களின் சாதிமுகம் சித்திரிக்கப் படவில்லை. சக்கரைச் சாமியும், மைனர் சுப்பையாவும் உயர்சாதிக்காரர்கள் என்றாலும், அது உய்த்துணர் நிலையில்தான் அறியப்படுகிறது. சாதி என்பது அகத்தும் புறத்தும் ஆளுமை செலுத்தும் ஒரு கூறு என்பதனை உணர்ந்து பொன்னீலன் படைத்ததாகத் தெரியவில்லை. சித்தையன் போன்ற மேல் சாதிக்காரர்களின் முதலாளியச் சார்புத் தன்மையில் சாதியும் உள்ளடங்கியுள்ளது.

சக்கரைச்சாமி, கண்ணப்பனின் சாதியைத் தெரிந்து கொள்ள ஒன்றியத்தின் அலுவலகம்வரை செல்கிறார். மேலும் இந்நாவலில் சாதியின் ஆற்றல் மிக்க இயக்கமாக ஒன்றையும்

அறியமுடியவில்லை. "அவனை நம்பியா நாமிருக்கோம், கரிசக் காடும், காலும் கையுந்தான் நமக்குத் தஞ்சம்" என்ற பெரிய வரின் ஆதங்கம் உண்மைக்கு நெருக்கமாக அமைந்து நாவலின் நடைமுறைப் பண்பிற்கு உதவியிருக்கிறது. ஆனால் "நம்ம நாடு ரொம்ப பெரிய நாடு, வடக்கே பெரிய மலை இருக்கு. இமய மலைன்னு பேரு, அதில இருந்து கன்னியாகுமரி வரைக் கும் எங்க பார்த்தாலும் வெளைச்சல் நெலம். அந்த நெல மெல்லாம் நமக்குச் சொந்தம்" என்ற வீரையனின் பேச்சு நடப்பைவிடக் கட்சிக் கோட்பாட்டையே வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

'மலரும் சருகும்' என்ற நாவல் வருக்கப் போராட்டத்தை முன்னிறுத்துவதுடன் சமுதாயத்தின் பாதிப்பை நன்கு விளக்கு கிறது. நாவலின் தொடக்கத்திலே சாதியின் ஆளுமை ஆழமாக விளக்கப்பட்டுள்ளது. என்னவோ சுதந்திரம் வந்திட்டா மேல் குலம் கீழ்குலமிங்கிறது எல்லாம் இல்லாமல் போயிருமோ' என்ற மூக்கையாத்தேவரின் உறுமலோடு நாவல் தொடங்கு கிறது.

புதிய கல்வி முறையால் ரத்தினம் கல்வி கற்க முயல மாடசாமிக்குடும்பன் குடும்பம் நிலத்தை இழத்தல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேல்சாதிக்காரர்களின் சூழ்ச்சியில் விழுந்து சொந்த நிலத்திற்கே அந்நியமாகிப் போகும் அவலம்; உழைத்தும் உரிமையைப் பிச்சை கேட்கும் நெருக்கடி; இறுதி யில் நிலத்தில் உழைப்பதற்கே மறுக்கப்படும் கொடுமை போன்றவற்றை விளக்குவதன் மூலம் மேல் சாதிக்காரர்களின் சுரண்டலும் சாதியத்தின் கொடூரமும் ஒரே வரிசையில் இருப்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும் ரத்தினத்தின் செயல்கள் நிலத்தை இழந்து நிற்கும் மக்களுக்குச் சார்பாக இல்லை. ரத்தினம் நாடார் சாதிப் பெண்ணை மணந்து கொண்டு தான் பிறந்த சாதியின் பெயரைச்சொல்வதற்கே வெட்கப்படுகின்றான்.

தன் உறவினரைக் கூடத் தன் வீட்டுப் பண்ணைக் கூலி என்று பேசும் அளவுக்குச் சொந்தச் சாதியினரிடமிருந்து அந்நியப்பட்டு விடுகின்றான். ரத்தினத்தின் செயல்களுக்குக் காரணம் 'சாதி' அவன் அக மனத்தில் செலுத்தும் ஆதிக்கமே. சேரி மக்கள் உரிமைக்காகப் போராடியபோது அவன் அவர்

களுக்கு எதிராகவும், நிலவுடைமையாளர்களுக்கு ஆதரவாகவும் செயல்படுகிறான். இதுதான் இவனது வருக்கமும். மேல் சாதிக் காரர்களின் சாதி முகத்தை விளக்கிக் காட்டியது போலவே ரத்தினம் போன்றோரின் வருக்க முகத்தையும் சிறப்பாகச் சுட்டிக்காட்டித் தன் இலக்கைத் தொட்டிருக்கிறார் செல்வராஜ்.

இட ஒதுக்கீடு மட்டுமே சாதிச் சிக்கல்களுக்கு ஒரு தீர்வாக அமையப்போவதில்லை என்பதை நாவலாசிரியர் ரத்தினத்தின் வழி புலப்படுத்துகிறார். மேலும் மாடசாமிக் குடும்பன், ஈசாக்கு, மோசே மூவரும் ஒரே சாதிக்காரர்கள் என்றாலும் அவர்கள் தங்கள் 'சாதி' முத்திரையைப் புரிந்துகொள்ளும் வேறுபாடான புரிதலையும் நன்கு காட்டியுள்ளார். வரலாற்றின் வளர்ச்சியைச் சரியாக உள்வாங்கிக் கொண்டு வார்க்கப்பட்டிருக்கும் இப் பாத்திரங்கள் நடப்பில் சாதியத்தின் முகத்தினை விளக்குவதுடன் அது வருக்கப் போராட்டத்தில் பெறுமிடத்தினையும் விளக்கி யுள்ளார்.

கடவுள்

தொடக்கத்தில் அறியாமையும், அச்சமும் சேர்ந்து பெற்றெடுத்த குழந்தையே கடவுள். நாளடைவில் அது தன்னலக் கிருமிகளால் வளர்க்கப் பட்டது. பின்னாளில் பொதுநல வாதிகளால் வாழ்க்கைக்கு வழிகாட்டும் மதமாக உருவாக்கப் பட்டது. இவ்வழிகாட்டல் இன்றைய சிக்கலைத் தீர்ப்பதாக இல்லை. அறிவியல் உண்மைக்கு மாறான கடவுள் கோட்பாடு சமூக மாற்றத்திற்குப் பெருந்தடையாக உள்ளது. மனித வாழ்க் கையின் விழுமியங்களைக் கூறும் பேரிலக்கியம் நடப்பு வாழ்க் கையில் கடவுள் செயலற்றுப் போனதை உரத்த குரலில் அறி விக்கின்றன. நாவல் இலக்கியத்தைக் கடவுளால் கைவிடப்பட்ட உலகம் என்று மேலைநாட்டு அறிஞர்கள் குறிப்பிடுவர்.

ஆனால், நம்மைப் பொறுத்தவரை கடவுள் என்பது அவ்வளவு எளிமையாகக் கைவிடக்கூடிய கருத்தாக இல்லை. ''கதையும் நமக்கு வேண்டும், கற்பும் வேண்டும், கடவுளும் வேண்டும். அதாவது நம் கலாச்சாரம் அப்படி. காரணம், கற்பும் கடவுளும் நம்முள் ஊறியுள்ள இரண்டு உண்மைகள். கற்பிலும் கதையுண்டு, கடவுளிலும் கதையுண்டு, இரண்டும் இருவிதக்

கதைகளே. ஆனால், இவ்விரு கதைகளும் நம் கலாச்சார வேரில் உறைந்துவிட்ட விஷயங்கள்'' என்ற தமிழவனின் கருத்து இங்கு சிந்திக்கத் தக்கது.

'பஞ்சும் பசியும்' என்ற நாவலில் ரகுநாதன் வெளிப் படையாகக் கடவுள் மனித வாழ்க்கையைப் பாதிப்பதில்லை என்ற கருத்தைத் கூறியுள்ளார். கைத்தறித் துணி விலை ஏற்றத் திற்கும், மலிவுக்கும் காரணம் சூழலும் சூழ்நிலையுமே அல்லாமல் வேறொன்றில்லை என்பதையும் தெளிவு படுத்துகிறார். ''தர்க்க ஞானத்தோடு உண்மையைத் தெரிந்து தெளிவு பெற இயலாத காரணத்தால், கைலாச முதலியார் முருகப் பெருமானின் திருவருளையும், லோக நாயகியம்மையின் கருணாகடாட்சத்தை யும் நம்பி, விடிவு காலத்தில் உதய ரேகையை எதிர்பார்த்துக் காலத்தை ஓட்டி வந்தார். சிரமங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவரது தெய்வ பக்தியும் மேன்மேலும் உரம் பெற்று வைரம் பாய்ந்து வளரத் தொடங்கியது. சுருங்கச் சொன்னால் கவலை யை மறக்க உதவும் கஞ்சா போதையைப் போல் முருக நமஸ் கரனை அவருக்கு உதவியது'' என்ற நாவலாசிரியரின் கூற்றே இதனை உறுதிப் படுத்தும்.

பொதுவாகப் புறநிலை நெருக்கடியால் ஏற்படும் சிக்கல் களை இறைவன் சோதனையாக எடுத்துக் கொள்ளும் மக்கள் மனநிலையை நாவலில் ஆங்காங்கே நன்கு பிரதிபலித்துள்ளார்.

''கரிசல்' என்ற நாவலில் பெருமாள்புரத்து மக்கள் பொங்கல் விழாவிற்குக் காப்புக் கட்டும் நிகழ்ச்சி சிறப்பாக விளக்கப் பட்டுள்ளது. மாரியம்மாள் கண்ணப்பன் உரையாடல் வழி சாதிக்குத் துணைபோகும் கடவுளை அம்பலப்படுத்துகிறார் பொன்னீலன். ''நாங்க மத்த 'சாதிக்காரங்கக்கிட்ட வாங்கித் திங்கக் கூடாது. எங்கம்மா கண்டா கொன்னு போடுவா .. சாப்பிட்டா எங்க கொல தெய்வத்துக்குக் கோபம் வந்திருமாம். பெறகு எங்கள அழிச்சிப்போடுமாம்'' (ப. 117) என்ற மாரியம் மாளின மூட நம்பிக்கைப்பேச்சு நடப்பு வாழ்வைப் படம் பிடிக்கிறது என்னும் வலுவான அளவுக்குக் கடவுள் மறுப்பு நாவலில் சித்திரிக்கப் படவில்லை.

'மலரும் சருகும்' என்ற நாவல் இறைக்கோட்பாட்டை நெடியின்றித் தகர்த்தெறிகின்றது. முதல் தலைமுறையினரின்

பிரதிநிதியான மாடசாமிக் குடும்பனின் குல தெய்வங்கள் ஈனப் பேச்சியும் சுடலை மாடனும் ஆகும். இரண்டாம் தலைமுறை யினரின் பிரதிநிதியான மாயாண்டி கிறித்தவ மதத்திற்கு மாறி மூக்கையா ஈசாக்கு ஆகிறான். மூன்றாம் தலைமுறையினரின் பிரதிநிதியான மோசே வள்ளியைப் பதிவுத் திருமணம் செய்து கொள்கிறான். இவனது இலக்கு என்பது சமூக மாற்றத்தை நோக்கிச் செல்கிறது. இது இவனது உள்ளுணர்வு மட்டுமன்று, புறநிலையால் ஏற்பட்ட சமூக நெருக்கடியுமாகும்.

நாகூர்கனி ராவுத்தர் சிறந்த இறை நம்பிக்கையாளர். ஆனால் அவரின் மருமகள்கள் வேலாண்டியோடு கொள்ளும் உறவு அவரை நிம்மதி இழக்கச் செய்கிறது. இக் கூடாஒழுக்கத் திற்குச் சூழ்நிலையே காரணமாக அமைந்துள்ளது ''அல்லாமேல் ஆணையிட்டுச்சொல்கிறேன், எனக்கு வாரிசுவேண்டாம், அத்தா வாரிசு வேண்டாம், இருந்தாலும் அவன் உண்மையான முசல் மானாக இருக்கமாட்டான், பள்ளிவாசல் பக்கமே எடுத்துட்டுப் போவமுடியாது, தள்ளாத வயசிலே இந்த அக்கிரமத்தைப் பார்க் கிறதை விட மவுத்தாயிடலாம் ... மவுத்தாயிடலாம்'' என்று சொல்லிவிட்டு மெக்கா பயணமாகிறார். மெக்கா செல்வதால் அவரின் மருமகள்கள் அல்லாவால் திருமுழுக்குப் பெறமுடியுமா என்ற கேள்வி வாசகனிடம் தோற்றுவிக்கப் படுகிறது.

மாயாண்டி ஈசாக்கிற்கு மதமாற்றம், வாழ்வில் சடங்கு மாற்றத்திற்கு உதவியதேயொழிய வாழ்க்கை மாற்றத்திற்கு உதவவில்லை. இயேசுநாதர் மாயாண்டி ஈசாக்கிற்குக் கதவைத் திறக்கவுமில்லை. கன்னிமரியாள் விரும்பிய ரெத்தினத்தைக் கைப் பிடிக்க உதவவுமில்லை.

சமய நம்பிக்கை மிக்க நாகூர்கனி தனது கடைசிக் காலத் தில் அமைதி இழந்து இறக்கிறார். மோசே மதங்களுக்குள் சிக்கித் திணறாமல் வருக்கப் போராட்டத்தில் முதன்மைப் போராளி யாக நின்று தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தூக்கி எறிவதற்காகப் போராடுகிறான். அவனது போராட்டத்தில் குறிப்பிட்ட அளவு வெற்றியும் அடைகிறான்.

இந்தியப் பொதுவுடைமைக்கட்சியின் இலக்கிய வாதிகளான ரகுநாதனும், பொன்னீலனும் கட்சிக் கண்ணோட்டத்தில் வாழ்க்

கையை அணுகியதால் சாதி எதிர்ப்பு நசிந்து காணப்படுகிறது. ரகுநாதனின் பஞ்சும் பசியும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதால் சாதி முரண்பாட்டைச் செழுமையாக விளக்க இடந்தரவில்லை. அவ்வாறு வாய்ப்புக் கிடைத்த இடத்திலும் கட்சி நிலைப்பாடே இவரின் நிலைப் பாடாக அமைந்துள்ளது, கடவுள் இயக்க மறுப்பியலின் பாற் பட்டதால் ரகுநாதன் சிறப்பாகக் கடவுள் கோட்பாட்டைத் தகர்த்தெறிகிறார். ஆனால் இவ்வாய்ப்பைப் பொன்னீலன் பயன் படுத்திக் கொள்ளவில்லை.

செல்வராஜ் இந்திய மார்க்சீயப் பொதுவுடைமை இயக் கத்தைச் சார்ந்தவர். இவர் நாவல் சாதி, கடவுள் இரண்டை யும் சரியான முறையில் தகர்த்தெறிய முனைகிறது. சரியான உள்ளடக்கம் அமையும் போதுதான் இலக்கியம் என்பது சமூக ஆய்வாக மாறுகிறது. இல்லையேல் நாவல் வெறும் கதையாகச் சிறுத்துப் போகிறது. இம்மூன்று நாவல்களிலும் 'மலரும் சருகும் உள்ளடக்கத்தில் சிறந்து நிற்கிறது.

வாழ்த்துப் பாடல்கள்

தெ. முருகசாமி
(முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி)

யார்காப்பார் செந்தமிழை என்ற போது
 "யான்காப்பேன்" எனத் தோளைத் தூக்கி வந்த
பேர்காத்த மறவர்குலத் திலகத் தோன்றல்!
 பேசரிய பைந்தமிழின் சிங்கத் தேவர்!
சீர்காத்த பெருமரபின் செம்மல்! தமிழைச்
 சீறுகிற பகைவர்மேல் புலியாய்ப் பாய்ந்து
தார்காத்த வாளைபோல் தமிழைக் காத்தார்
 தார்ப்பாய்ச்சுப் பாண்டித்துரைத் தேவர் தானே!

பாண்டித்துரைத் தேவரவர் இல்லை என்றால்
 பைந்தமிழும் பண்டிதரும் இல்லை என்ற
பாண்டிமகன் உணர்வாலே தமிழ்ச்சங் கத்தில்
 பாவலரும் நாவலரும் ஒன்று கூடி
ஆண்டிருந்த தமிழாய்வைச் செய்து அந்தோ
 ஆர்ப்பரித்தே அவர் நினைவைப் போற்றி போற்றி
மூண்டிருக்கும் தமிழுணர்வால் நடாத்தும் இந்த
 மூவேந்தர் தமிழ்விழாதான் வாழ்க! நன்றே!

மதிப்புரை

ஆண்டாள்

நூலின் பெயர் : ஆண்டாள் ஆசிரியர் : கே.ஏ. மணவாளன் கிடைக்கும் இடம் : சாகித்திய அக்காதெமி சுவாதி மந்திர் மார்க், புதுதில்லி–110001 விலை ரூ. 10. பக்கம். 104.

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வெளிவந்துள்ள. இந்நூல் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'யாம் ஆண்டாளின் வாழ்க்கை வரலாற்றையும், பக்தித் திறத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. 'ஆழ்வார்கள்–ஆண்டாள் காலம்–வரலாறு', 'பாவை நோன்பு - தைந்நீராடல்', 'நாச்சியார் திருமொழி நயங்கள்', 'இலக்கிய நோக்கில் திருப்பாவை' என்னும் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வில்லிப்புத்தூரிலே வாழ்ந்து வந்த கோதை நாச்சியார், கண்ணன் கதைகளோடு உயர்ந்த தத்துவ ஞானக் கொள்கைகளையும் அறிந்து கொள்ளும் பேறு பெற்றார். 'சர்வலோக சரண்யனான ஆண்டவனையே ஆண்டு கொண்டது 'ஆண்டாள்' என்று அழைக்கப்பெறும் தகுதியையும் அவருக்கு அளித்தது. இச்செய்திகளை ஆழ்வார்கள் ஆண்டாள் காலம்-வரலாறு என்னும் இயல் எடுத்துரைக்கிறது. ஆண்டாள் பாடிய திருப்பாவையில் 'புள்ளின் வாய் கீண்டானை' என்று தொடங்கும் பாடலில், 'வெள்ளி எழுந்தது, வியாழன் உறங்கிற்று' என வரும் பாடல் அடியை அடிப்படையாகக் கொண்டு அவருடைய காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் ஆகும் என்று அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டி நிறுவுகிறார் ஆசிரியர்.

'அந்தணர் குலத்துதித்த பெரியாழ்வாரின் மகளாக இருந்து ஆயர்குலத்தில் அவதரித்த அக்கண்ணபிரானை அடைவதும், அணைவதும், அருள் பெறுவதும் அவ்வளவு எளிதான காரியமன்று. அவனது இன்னருளுக்கு இலக்காக வேண்டும் என்றால் தானும் ஓர் ஆயர்பாடிச் சிறுமியாக மாறிவிட வேண்டும் என்று நினைத்து அந்த மனோபாவத்துடனேயே தன் நடை உடை பாவனை முதலிய அனைத்தையும் அமைத்துக் கொண்டாள். இச் செய்திகளை பெரியவாச்சான் பிள்ளை, 'இடை முடியும், இடைப்பேச்சும், முடைநாற்றமுமாயிற்று' என்பர்

(ப.27) என்று ஆண்டாள் ஆயர்பாடியிலே வளர்ந்த கண்ணனை அடைய ஓர் இடைச்சியாகவே மாறிய தன்மையையும், தம் கொள்கை உறுதியால் அரங்கநாதப்பெருமானை மணம் கூடியதையும் இரண்டாம் இயலில் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

'நாச்சியார் திருமொழி நயங்கள்.' என்னும் இயலில், நாச்சியார் திருமொழியில் அமைந்த பல்வேறு பொருட்சிறப்புக்களை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

'ஆண்டாள் வில்லிப்புத்தூரிலே பிறந்து வளர்ந்து வருபவளாயிலும், அவ்வூர்க் கோயிலிலே சென்று அப்பெருமானைச் சேவிப்பது அவளுக்கு அவ்வளவு எளிதான செயலன்று. அவள் உள்ளே புகுந்தவாறே, எம்பெருமானுடைய குணத்தை அநுசந்தித்து அதிலே ஆழங்கால் பட்டு மயங்கிப் பரதாழ்வானைப் போலே மோகித்துக் கிடப்பள். பாவைநோன்பு நோற்க வேண்டிய சூழலையும், நோன்பின் சிறப்பையும் முறையையும் 'இலக்கிய நோக்கில் திருப்பாவை' என்னும் இயலில் விளக்கியுள்ளார் ஆசிரியர்.

ஆண்டாளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இந்நூல் துணை புரிகின்றது. எனினும் அவருடைய பாடல்களைப் பற்றிய முழுமையான மதிப்பீடு இந்நூலில் அமையவில்லை. நாச்சியார் திருமொழிப் பாடல்களில் ஆண்டாள் இறைவனை நினைந்து புலம்பும் உணர்வினை மட்டும் வெளிப்படுத்திக் காட்டும் ஆசிரியர், அவற்றின் உள்ளீடாக அமையும் தத்துவப் பொருளையும் எடுத்துக்காட்டியிருந்தால் முழுமையான கண்ணோட்டம் கிடைத்திருக்கும்.

டாக்டர். **நிர்மலா மோகன்**

நூல்கள் வரப்பெற்றோம்

கோவர்தன்ராம்
ஆசிரியர் : **ரமன்லால்ஜோஷி**
கிடைக்கும் இடம் : சாகித்திய அக்காதெமி
சுவாதிமந்திரமார்க், புதுடெல்லி – 110001.

தேன்சொட்டுகள் (கவிதைத்தொகுப்பு)
ஆசிரியர் : **செம்மைநதிராசா**
கிடைக்கும் இடம் : பதிபதிப்பகம்,
46, செக்கடி 3வது தெரு, கோவில்பட்டி - 627701.

1990-91 ஆம் ஆண்டு தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல் மாநகரில் 1901 – ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவர் அவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில், தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ்க் கலாசாலை ஒன்றைத் தேவரவர்கள் அன்றே அமைத்தார்கள். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கலாசாலையில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தை பெற்றவர்களாவர். அக்கலாசாலை இன்றைக்குப் பல்கலைக்கழக இணைப்புப் பெற்ற செந்தமிழ்க் கல்லூரியாக இயங்கிவருகின்றது. இக்கல்லூரியில் இளம் இலக்கியம், இளங்கலை, முதுகலை, எம்ஃபில் ஆய்வு வகுப்பு ஆகிய பட்ட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு திருவுருவச்சிலை

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்பு செய்துள்ளது.

தேர்வின் அமைப்பும், பயனும்

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு, கடந்த 89 ஆண்டுகளாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது. இத் தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர் நிலைப்பள்ளி

மேல்நிலைப் பள்ளி, மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்களை அமைத்துத் தேர்வு நடத்திவருகின்றது. பொதுத் தேர்விற்கு (Public Exami; ation) முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்துகொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு வாய்ப்பளிக்கிறது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும்

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு உயர்நிலை, மேல்நிலை, மெட்ரிக்குலேசன் பள்ளியில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்றஆண்டு மட்டும் நாற்பது மாணவர்களுக்கு மேல் ரொக்கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வுதாள், தேர்வுக்கட்டணம்

	தேர்வு நாள் —	தேர்வுக்கட்டணம்
பத்தாம் வகுப்பு (S.S.L.C)	11-2-1991	ரூ. 5.25
” (Matriculation)	28-1-1991	ரூ. 5.25
பன்னிரண்டாம் வகுப்பு (பொது)	28-1-1991	ரூ. 5.25
” (சிறப்புத்தமிழ்)	29-1-1991	ரூ. 2.75

தமிழ்ச்சங்கத் தேர்விற்கு மாணவர்கள் முழுமையாகப் பாடப்பகுதிகளைப் படிப்பதற்கு வசதியாக தேர்விற்கு முதல் நாள் விடுமுறை நாளாக இருக்கும்படியாகவும்; மாணவர்கள் அனைவரும் தேர்வில் கலந்து கொள்ளும் வகையில் தேர்வுநாள் வேலைநாளாக அமையும்படியாகவும் தமிழ்ச்சங்கத் தேர்வுநாள் அமைக்கப்பட்டிருப்பதைத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வருகின்றோம்.

விடைத்தாள் திருத்துவதற்கான அன்பளிப்பு

தமிழாசிரியர்களின் வேண்டுகோளினை அன்புடன் ஏற்று விடைத்தாள் திருத்துவதற்கான அன்பளிப்புத் தொகை தாள் ஒன்றிற்கு ரூபாய் ஒன்றிலிருந்து ரூ. 1.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பு வேண்டுகோள்

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டி அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்த இதழின் கடைசிப்பக்கத்தில் உங்கள் பள்ளியில் இருந்துத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அப்பக்கத்தினைத் தனியாக எடுத்து எங்களுக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பள்ளித்தலைமை ஆசிரியர் அவர்கள் முகவரிக்கு

1. மாணவர் பெயர்ப் பதிவுப் பட்டியல் 2. வரவு செலவுப் பட்டியல் 3. விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப்பட்டியல் 4. கால அட்டவணை, தேர்வுக் கட்டண விவரம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விவரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டுத் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லையென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ச் சங்கத்தேர்வு நடத்திட அரசு அனுமதி

அரசு ஆணை R. Dis 166528 / 65 Dated 22.12.65 என்ற ஆணையின் (G.O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாழும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இராமநாதபுரம்
சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி பி.ஏ.
தலைவர்

தங்களன்புள்ள
மா. த. பாண்டியன்
செயலாளர்

1989-90ம் ஆண்டு ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரம்

10 – ஆம் வகுப்பு (எஸ். எஸ். எல். சி) தமிழ்த்தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் :

வ எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத் தொகை ரூ–பை
1.	டி. சசிக்கலா, திரு இருதய பெண்கள் மேல் நிலைப்பள்ளி, கீழச்சேரி, செங்கை–மாவட்டம்	182	முதல்	50–00
2.	கே. முத்துச்செல்வி, பாயிலர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கைலாசபுரம், திருச்சி (முதல் பரிசு ரூ. 100/ யை ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது)	"	"	50–00
3.	இரா. சாம்பசிவம், தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. திருநெல்வேலி – 2	181	இரண்டாம்	30–00
4.	ஆர். அகிலா, அரசு மேல்நிலைப்பள்ளி, எளச்சிபாளையம், சேலம் – மாவட்டம் (இரண்டாம் பரிசு ரூ. 50 உடன் ரூ. 10/யை சேர்த்து ஒரே மதிப் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது)	"	"	30–00

5.	சூ. கு. தீபா, ஸ்ரீவெங்கடேசுவரா உயர்பள்ளி அப்பநாயக்கன்பட்டி, கோவை – மாவட்டம்	180	மூன்றாம்	25-00
6.	வி. எஸ். சிவசங்கிரி இந்து மேல்நிலைப்பள்ளி ஆம்பூர், 2. ஆ. மாவட்டம்	179	ஆறுதல்	10–00
7.	க. ஜெயம், சுசீலாபாய் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கலவை சுப்புராயச் செட்டிதெரு பாண்டிச்சேரி – 1	”	”	10–00
8.	வீ. சி. அங்கயற்கண்ணி, கேப்ரன்ஹால் மகளிர் மேல் நிலைப்பள்ளி, மங்களபுரம், மதுரை - 10	”	”	10–00
9.	கு. கலா, குழந்தை இயேசு உயர்பள்ளி, முளகுமூடு, குமரி-மாவட்டம்	178	”	10–00
10.	ச. நல்லசாமி, சி. நா. ராமசாமி ராஜா மேல் நிலைப்பள்ளி, ஸ்ரீகோமதிபுரம், நெல்லை – மாவட்டம்	”	”	10–00
11.	பி. விஜயக்குமார், போப் நினைவு மேல்நிலைப் பள்ளி, சாயர்புரம், வ. உ. சி– மாவட்டம்	”	”	10–00
12.	டி. பாலசுப்பிரமணியம், எஸ். ஆர். என். வி. மேல் நிலைப்பள்ளி, லட்சுமிநாயக்கன் பாளையம், கோவை–மாவட்டம்	”	”	10–00

13.	பி. முகுந்தன் சுதந்திர மேல்நிலைப்பள்ளி, வையம்பாளையம், கோவை – மாவட்டம்	,,	,,	10-00
14.	பா. தமிழ்ச்செல்வி, புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திண்டி வனம், தெ.ஆ. மாவட்டம்	,,	,,	10-00
15.	கோ. கிரிஜா, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி, தெ. ஆ. மாவட்டம்	,,	,,	10-00
16.	பி. கார்த்திகாதேவி, புனித மரியம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, செங்கற்பட்டு	,,	,,	10-00
17.	பி, கேசவன், சிறுமலர் உயர்நிலைப்பள்ளி, ஆண்டாலூரணி, முகவை மாவட்டம்	178	ஆறுதல்	10-00
18.	எம். கணபதி சுப்பிரமணியன் டி.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி, இலக்குமிபுரம், மதுரை–11	178	,,	10-00
19.	எஸ். மலர்விழி சௌராட்டிரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், மதுரை–9	178	,,	10-00
20.	இரமேஷ்குமார் எஸ்.டி.எச். ஜெயின் வித்யாலயா மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி, திருப்பாலை, மதுரை–14	178	,,	10-00

12-ம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப்பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்

வ எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத் தொகை ரூ—பை
1.	இரா. இராஜேஸ்வரி ஏ. வி. ஆர். எம். வி. மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, அம்பா சமுத்திரம், நெல்லை—மாவட்டம்	187	முதல்	50-00
2.	எம். சாபிராபானு சி.எஸ்.ஐ. மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு, பெரியார்—மாவட்டம் (முதல் பரிசுத் தொகை ரூ 100/—யை ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.)	187	முதல்	50-00
3.	ஆ. ஆனந்தலட்சுமி, தூய வளனார் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி, தெ.ஆ. மாவட்டம்	186	இரண்டாம்	30-00
4.	என். முத்துச்செல்வி திருவள்ளுவர் அரசுபெண்கள் மேல்நிலைப்பள்ளி பாண்ச்சேரி—3 (இரண்டாம் பரிசுத்தொகை ரூ.50 உடன் ரூ.10 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாக பிரித்துக்கொடுக்கப் படுகிறது.	186	இரண்டாம்	30-00

5.	கு. செந்தில்குமார் ஏ.வி.ஆர்.எம்.வி. மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, அம்பா சமுத்திரம், நெல்லை – மாவட்டம்.	185	மூன்றாம்	15–00
6.	எஸ். பத்மபிரியா ஈ.வெ.ரா. நாகம்மையார் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தெற்கு வெளிவீதி மதுரை-1 (மூன்றாம் பரிசுத்தொகை ரூ. 25உடன் ரூ 5யை சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டுமாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.)	185	மூன்றாம்	15–00
7.	ச. இராஜேஸ்வரி ஏ.வி.ஆர்.எம்.வி, மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி அம்பாசமுத்திரம், நெல்லை – மாவட்டம்	182	ஆறுதல்	10–00
8.	செ. கார்த்தீஸ்வரி, சி.நா. ராமசாமிராஜா மேல் நிலைப்பள்ளி, ஸ்ரீகோமதிபுரம், நெல்லை – மாவட்டம்	180	”	10–00
9.	ஆ. அலமேலு, திலகர்வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கல்லிடைக்குறிச்சி,	180	”	10–00
10.	எஸ். தனபால் அரசினர் மேல்நிலைப்பள்ளி, அம்மூர் 2. ஆ–மாவட்டம்	179	”	10–00
11.	கு. சியாமளா, சி.நா. ராமசாமிராஜா மேல் நிலைப்பள்ளி, ஸ்ரீகோமதிபுரம், நெல்லை – மாவட்டம்	178	”	10–00

12.	கி. சிவசங்கர், எஸ்.எம்.எஸ்.எம். மேல்நிலைப்பள்ளி, சுசீந்திரம், குமரி-மாவட்டம்	178	”	10-00
13.	ச. பத்மாவதி, புனித பிலோமினாள் மகளிர் மேல் நிலைப்பள்ளி, திண்டிவனம், தெ.ஆ. மாவட்டம்	178	”	10-00
14.	ச. தேவி, ஏ.வி.எம். மாரிமுத்து நாடார் மேல்நிலைப்பள்ளி, விளாம்பட்டி, காமராசர்-மாவட்டம்	178	”	10-00
15.	க. புவனா, என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப்பள்ளி, நெய்வேலி-3, தெ.ஆ. மாவட்டம்	178	”	10-00
16.	எம். சுசீல் குமார் இராஜா மேல்நிலைப் பள்ளி இராமநாதபுரம்	178	ஆறுதல்	10-00
17.	எஸ். தனலட்சுமி, சீதாலட்சுமி மகளிர் மேல் நிலைப்பள்ளி, திருநகர் மதுரை-6	178	”	10-00
18.	எஸ். அனந்தராமன் டி.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி இலக்குமிபுரம், மதுரை-11	178	”	10-00
19.	ரொ. ரொமானா தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி, வ.உ.சி மாவட்டம்	178	”	10-00
20.	கே.கே. சைலஜா அரசினர் மேல்நிலைப்பள்ளி, கூடலூர், நீலகிரி-மாவட்டம்	178	”	10-00
21.	கா. குங்குமராஜ் திருப்பதி அருள்நெறி மேல் நிலைப்பள்ளி, கள்ளி-மந்தயம், காயிதே மில்லத்-மாவட்டம்	178	”	10-00

படிவம் : 2

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர் :

____

____

____

பெறுநர் :

செயலாளர் அவர்கள்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001.

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் நம்முடைய தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விவரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். இந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலையும், தேர்வு பற்றிய பிற குறிப்புகளையும் அனுப்பி வைக்கவும்.

விடைத்தாள் திருத்தவிரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை_____

வகுப்பு	மாணவர்களின் எண்ணிக்கை
பத்தாம் வகுப்பு	________
மெட்ரிகுலேசன்	________
பன்னிரண்டாம் வகுப்பு (பொது)	________
(சிறப்புத்தமிழ்)	________

இங்ஙனம்

நாள் :-

தலைமையாசிரியர் / தலைமைத் தமிழாசிரியர்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 10-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. கோவை, கலம்பக நூல்கள் 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக்கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. உலா நூல்கள் 10-00
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. பாமாலை நூல்கள் 12-00
    1. திருப்பணிமாலை
    2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12

1. முத்தொள்ளயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (" ")
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான் மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்வி ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந் ரூ.1500. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரரா சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழ் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழு 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக் தொகைக்கு நூல்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படு
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலா
மதுரைத் தமிழ்ச் சங்
மதுரை-1

பரணி அச்சகம் ❋ மதுரை-1